
அரங்கம்
செய்திகள்
தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்
வார இதழ் – இலவசம் வெள்ளி, மே 10 2019. இதழ் - 63



**அரசாங்க அதிகாரிகளுக்கு ஒரு அக வணக்கம்**

அரசாங்க அதிகாரிகளே நீங்கள் நல்லவர்களா அல்லது கெட்டவர்களா

பக்கம் - 03



**சொல்லத் துணிந்தேன்!**


21 – 04- 2019 இல் உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற தொடர்குண்டுத் தாக்குதலில்

பக்கம் - 11



**கருத்தியல் உரையாடலை வேண்டி நிற்கும் குண்டுத் தாக்குதல்கள்**

பக்கம் -07



**அப்போதைய அகப்பை இப்போதில்லை!**

'நாங்க பாவிச்சதெல்லாம் அகப்பைதான்....

பக்கம் - 11

# பாதுகாப்புச் சபை மீண்டும் கூடுமா? வெளிநாட்டுப் புலனாய்வுச் அதிகாரிகளுக்கு மகிந்த தரப்பு எதிர்ப்பு



--- நி.அமிர்தஸன் ---

இலங்கையில் மீண்டும் குண்டுகள் வெடிக்கலாம் என புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதையடுத்து இலங்கைப் பாதுகாப்புச் சபையை மீண்டும் கூட்டி ஆராய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சரவைத் தகவல்கள் கூறுகின்றன.

குண்டு வெடிப்புத் தொடர்பான முன்னெச்சரிக்கைத் தகவல்கள் கிடைத்ததை அடுத்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் முரண்பாடுகளைத் தவிர்த்து பாதுகாப்புச் சபைக் கூட்டத்திற்கு அவரையும் அழைத்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் அமைச்சரவைத் தகவல்கள் கூறுகின்றன.

ஆனாலும் மைத்திரியும் ரணிலும் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பு இல்லையென உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பாதுகாப்புச் சபைக்குத் தொடர்பில்லாத உயர் அதிகாரிகள் சிலர் அழைக்கப்படுவதாகவும் இதனால் ரணில் விக்கிரமசிங்க அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள வாய்ப்பில்லை எனவும் ஐக்கிய தேசியக் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

இதனால் பாதுகாப்புச் சபையை கூட்டாமலேயே முப்படை அதிகாரிகளையும் அழைத்து ஜனாதிபதி பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடுவாரெனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, கொழும்பில் கடந்த இரண்டு வாரங்களாக தங்கியிருக்கும் இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் சர்வதேசப் புலனாய்வு அதிகாரிகளும் இலங்கைப் புலனாய்வு உயர் அதிகாரிகளோடு இணைந்து குண்டுத் தாக்குதல் எச்சரிக்கை தொடர்பாகத் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகக் கொழும்பு உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

ஏதிர்வரும் திங்கட்கிழமை 13 ஆம் திகதி கொழும்பில் வெள்ளவத்தை, பஞ்சிகாவத்தை, நாவல போன்ற பிரதான நகரங்களில் குண்டுகள் வெடிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாக இலங்கைப் புலனாய்வுத்துறைக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனை இலங்கைச் சுற்றுலாத்துறை அதிகாரசபை சென்ற திங்கட்கிழமை ஆறாம் திகதி அதிகாரபூர்வமாக அரசாங்கத்துக்கு அறிவித்திருந்தது. இந்தத் தகவலை பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை மாலை வெளியிட்டிருந்தார்.

ஏதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு வாழ் மக்களை எப்படிப் பாதுகாப்பது என்பது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

அதேவேளை, அமெரிக்க, இந்திய புலனாய்வு அதிகாரிகளுடன் இணைந்து இலங்கைப் புலனாய்வு அதிகாரிகள் செயற்படுவதற்கு மகிந்த ராஜபக்ச தரப்பு கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது. மைத்திரிபால சிறிசேனவும் மகிந்த தரப்பு நிலைப்பாட்டை ஏற்றுச் செயற்படுவதாகவும் உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

## பாதுகாப்பற்ற சூழ்நிலை தொடருவதாக பேராயர் கவலை



கத்தோலிக்க தனியார் பாடசாலைகள் மே 14ஆம் திகதியே இரண்டாம் தவணைக்காக ஆரம்பிக்கும் என்று கத்தோலிக்க பேராயர் மெல்கம் ரஞ்சித் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இருந்தாலும் ஏதாவது அவசர நிலைமை ஏற்பட்டால் வெசாக் போயாவுக்கு பிறகே அவற்றை மீண்டும் திறக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் அவர் கூறினார்.

அடுத்த ஞாயிறு முதல் தேவாலயங்களில் ஞாயிறு ஆராதனைகள் வழமைபோல நடக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் பாதுகாப்புத் தொடர்பான சந்தேகங்களையே ஏற்படுத்துவதாகவும் பேராயர் மெல்கம் ரஞ்சித் கூறியுள்ளார்.


இவ்வாறான பாதுகாப்பற்ற சூழல்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

ஊழலை ஒழிப்போம்!
அதற்கு எதிராக குரல்கொடுப்போம்
தமிழிலும் இலவச சட்ட ஆலோசனை பெற
அழையுங்கள்
011 2 501 503
TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity
நேர்மையின் புகலிடம்
இல: 5/1, எல்பேங்க் வீதி, கொழும்பு – 05
Email: help@tisrilanka.org Web: www.tisrilanka.org
மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76



## மாணவர்களின் பாதுகாப்புக்கு - 1929






தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அவசர தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
இந்தத் தொலைபேசி இலக்கம் 1929 ஆகும். நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமையில் சிறுவர்களுக்கு உதவுவதற்காகவே இந்த தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தி இருப்பதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் எம்.எம். அபேவர்த்தன தெரிவித்தார்.

பாடசாலை இரண்டாம் தவணை நடவடிக்கைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து விடுக்கப்பட்ட அழைப்புக்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் பொழுது இது அந்த பகுதி தொடர்பில் விழிப்புடன் மாணவர்கள் செயற்பட வேண்டும் என்று அதிகார சபை தலைவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## ஆயுதங்கள் மீட்கப்படுவதை காண்பிக்க வேண்டாம்

நாடு பூராகவும் மேற்கொள்ளப்படுகின்ற சோதனை நடவடிக்கையின் போது மீட்கப்படுகின்ற வாள்கள் உட்பட ஆயுதங்கள் தொடர்பான காணொளிகளை ஒளிபரப்ப வேண்டாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நாலக களுவெவ சகல ஊடக நிறுவனங்களுக்கும் இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார். சகல ஊடக நிறுவனங்களினதும் பிரதானிகளை வியாழன் காலை அரச தகவல் திணைக்களத்திற்கு அழைத்து இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

## வெசாக்குக்கு போதிய பாதுகாப்பு



மே 18 இராணுவ வெற்றி தினம் குறைந்த மட்டத்திலேயே கொண்டாடப்படும் என்றும் வெசாக் தினத்துக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படும் என்று இராணுவ தளபதி ஜெனரல் மஹேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சந்திப்பு ஒன்றில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து வெளிநாட்டு இராஜ தந்திரிகளுக்கு விளக்கம் அளிக்கும் கூட்டத்திலேயே இராணுவத் தளபதி இதனைக் கூறியுள்ளார்.

## இராணுவத்தில் இருந்து இடை விலகியவர்களுக்கான பொதுமன்னிப்பு காலம் நிறைவு



இராணுவ சேவையில் இருந்து இடை விலகிய அனைத்து இராணுவத்திரையும் இராணுவ சேவையில் இருந்து உத்தியோகபூர்வமான விலகளை பெற்றுக்கொள்வதற்கான பொதுமன்னிப்பு காலம் வெள்ளியுடன் நிறைவடைகின்றது.

பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவ தளபதியின் பரிந்துரைக்கமைய பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பொதுமன்னிப்பு காலத்துக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொதுமன்னிப்பு காலவரையரை 2019 ஏப்ரல் 22 தொடக்கம் மே மாதம் 10 ஆம் திகதி வரை நான்கு நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

இடைவிலகியவர்கள் நேரடியாக தங்களது படையணித் தலைமையகத்துக்கு சென்று அல்லது தொடர்புகொண்டு, குறிப்பிட்ட பொதுமன்னிப்பு காலத்திற்குள் அவர்களுடைய விலகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குண்டுத் தாக்குதல் பாதிக்கப்பட்ட தேவாலயங்களை புனரமைக்கும் பணி ஆரம்பம்

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதலில் சேதமடைந்த தேவாலயங்களை புனரமைப்பதற்கு விரைவான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் ஆலோசனையின் பேரில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

அதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. மட்டக்களப்பு சியோன் தேவாலயத்திற்கு முதற் கட்டமாக ஐந்து மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். நீர்கொழும்பு - கட்டுவாபிட்டிய தேவாலயத்தின் புனரமைப்புப் பணிகளுக்காக முதற் கட்டமாக பத்து மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இந்த இரு தேவாலயங்களும் இராணுவத்தினரால் புனரமைக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தை கடற்படை புனரமைக்கவுள்ளது. புனரமைப்புப் பணிகளுக்காக முதற் கட்டமாக பத்து மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாக செயலாளர் தெரிவித்தார். புனரமைப்புப் பணிகளுக்கு தேவையான நிதி மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் முழுமையான நிதி வழங்கப்படும் என்றும் அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி குறிப்பிட்டார்.




கமலா வாசுகி

## ஆரையம்பதி கண்ணகை அம்மன் சடங்கு



ஈழத்தின் கிழக்கே, பிரபல்யம் மிக்க ஆரையம்பதி கண்ணகை அம்மன் கோயில் வைகாசி சடங்கு பெருவிழா 11.05.2019 அன்று ஆரம்பமாகி 19.05.2019 அன்றுடன் நிறைவு பெறும்.

11.05.2019 (சனிக்கிழமை) இரவு திருக்கதவு திறத்தலும் அம்மனை அழைத்து வருதலும் இடம்பெற்று தொடர்ந்து வரும் நாட்களில் மாலைச் சடங்கு, அதிகாலைச்சடங்கு என்பன இடம்பெறும். தொடர்ந்து 15.05.2019 (புதன்கிழமை) இரவு கல்யாண கால் வெட்டுதல் மற்றும் கூறைத்தாலி வைபவமும் 16.05.2019 (வியாழக்கிழமை) அதிகாலை திருக்கல்யாணச் சடங்கும் இடம்பெறும்.

அத்துடன் 17.05.2019 (வெள்ளிக்கிழமை) அதிகாலை கப்பல்காரர் சடங்கு மற்றும் 18.05.2019 (சனிக்கிழமை) அதிகாலை பச்சை கட்டி சடங்கு 18.05.2019 (சனிக்கிழமை) நள்ளிரவு திருக்குளிர்த்தி என்பனவும் விசேட சடங்குகளாக நடைபெறும். இறுதி நாளான 19.05.2019 (ஞாயிற்றுக்கிழமை) இரவு அம்மனை அழைத்துச் செல்லுதலும் திருக்கதவு அடைத்தலும் இடம்பெறும்

சடங்கு காலங்களில் தினமும் கோவலன் கதை படிப்பு இடம்பெறுவதுடன் மாலைச்சடங்கு பிற்பகல் 5.00 மணிக்கும் காலைச்சடங்குகள் அதிகாலை 3.30 க்கும் இடம்பெறும். கதிரேசர் சடங்கு, கப்பல்காரர் சடங்கு மற்றும் பச்சைகட்டி சடங்குகளின் பின்னர் அம்மனின் கும்பம் ஊர் சுற்றுதல் இடம்பெறும். என்பதுடன் சடங்குக்கான பிரதம கட்டாடியாராக திரு.த.மகேஸ்வரன் அவர்களும் உதவிக்கட்டாடியாராக திரு.த.தட்சனாமூர்த்தி அவர்களும் அம்பாளின் பணியாற்றுவார்கள் என ஆரையம்பதி கந்தசுவாமி, கண்ணகை மற்றும் வீரமா காளி அம்மன் ஆலயங்களில் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

# அரசாங்க அதிகாரிகளுக்கு ஒரு அக வணக்கம்



அரசாங்க அதிகாரிகளே நீங்கள் நல்லவர்களா அல்லது கெட்டவர்களா என்று சில வாரங்களுக்கு முன்னதாக அரங்கம் பத்திரிகையில் நாம் எழுதியபோது. அந்த சாதகமான விமர்சனத்தை சில அதிகாரிகளாவது வருத்தத்துடன் பார்த்துத்தான் இருப்பார்கள்.

ஆனால், இந்த வாரம் அப்படியல்ல. அரசாங்க அதிகாரிகள் இதனை நிச்சயமாக ஒரு சாதகமான விமர்சனமாகப் பார்க்கலாம். இந்த விடயத்தை நான் கொஞ்சம் இலகுவாக ஆரம்பித்தாலும் இது ஒரு கனதியான விடயம்.

கடந்த வார அரங்கம் பத்திரிகையில் குண்டுவெடிப்புத் தாக்குதல் குறித்த மன்னிப்புக் கோரல்களை, வருத்தங்களை தமிழ் மக்கள் பொறுப்புடன் பிரதிபலிக்க வேண்டும். அதற்கான பிரதிபலிப்புக்கள் சமூக நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்டவையாக இருக்க வேண்டும் என்று கேட்டிருந்தோம். அவை குறித்து கடுமையான எதிர்ப்பு எமக்கு வந்தாலும் நாம் எமது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கப் போவதில்லை. ஏனெனில் இது முஸ்லிம் சமூகத்துக்கு மாத்திரமல்ல நான் சார்ந்த தமிழ் சமூகத்தின் எதிர்காலச் சந்ததிக்கும் மிகவும் அவசியமானது. அவர்களது நின்மதிக்கும் அவசியமானது.

எவ்வளவு எதிர்ப்பு இருந்த போதிலும் இந்த விடயத்தில் எமது மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் மிகவும் பொறுப்புடன் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அரசாங்க அதிபர் தலைமையில் இந்த வார முற்பகுதியில் மாவட்ட மட்ட நல்லிணக்கக் குழு கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்ட அரசாங்க அதிபர் மா. உதயகுமாரும் ஏனைய அதிகாரிகளும் தாம் நல்லிணக்கத்துக்காகத்தான் செயற்படுவோம் என்பதை மிகவும் வலுவாகவே வலியுறுத்திக் கூறினார்கள். அது வரவேற்கத்தக்கது. நல்லிணக்க விடயத்தில், காலந்தாழ்த்தாது இப்படி ஒரு கூட்டத்தை நடத்தியதே மாவட்டச் செயலகத்துக்கு பெருமை தரும் செயல்தான். ஒரு வருடத்துக்கு முன்னதாகவே ஆரம்பிக்கப்பட்ட நல்லிணக்கக் குழு போதுமான அளவு முன்னேற்றத்தை இதுவரை காணவில்லை என்ற விமர்சனம் முன்வைக்கப்பட்டாலும், இந்த விடயத்தில் அடுத்த கட்டத்தை நோக்கி முன்னேற வேண்டும் என்ற மாவட்டச் செயலகத்தின் நிலைப்பாடு பாராட்டத்தக்கது. பலதரப்பினராலும் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள் மற்றும் கோரிக்கைகள் அங்கு நிதானமாக உள்வாங்கப்பட்டன.

ஒவ்வொரு சமூகத்தின் கோரிக்கைகள் எதிர்பார்ப்புக்கள் உரிய பொறுப்புடன் அடுத்த சமூகத்தால் உள்வாங்கப்பட வேண்டும். ஒரு சமூகம் நிலைகுலைந்து நிற்கும் போது எவ்வளவு பிரச்சினைகள் இருந்தாலும் சக சமூகம் அதனை உரிய அளவு முக்கியத்துவம் கொடுத்து பிரதிவினையாற்ற வேண்டும் என்ற எமது கோரிக்கையையும் அரசாங்க அதிபர் சாதகமாக தனது தீர்மானத்தில் உள்வாங்கிக்கொண்டார். அதற்கேற்ப, புரிதலுக்கான திறந்த மனதுடனான கலந்துரையாடல்கள் சமூகங்களுக்கிடையே நடத்தப்படல் வேண்டும் என்பதையும் அவர் தனது

சீவகன் பூபாலரட்ணம்

தீர்மானத்தில் சேர்த்துக்கொண்டார்.

இவை தவிர சமூகங்களுக்கிடையிலான பாதுகாப்பு மற்றும் நல்லிணக்கம் ஆகியவை குறித்து பல முன்னேற்றகரமான விடயங்களை அரச அதிபர் மா. உதயகுமார் தனது தீர்மானங்களில் சேர்த்துக்கொண்டார். சமூக மட்ட விழிப்புக் குழுக்கள் என்பனவும் அதில் அடங்கும்.

பொதுவாகச் சிவப்பு நாடா முறைமை, சட்டமியற்றுபவர்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய தன்மை, எந்த நடவடிக்கையும் இம்மியளவும் பொருத்தமான அளவை மீறிவிடக் கூடாது என்ற கட்டுப்பாடு காரணமாக சில விடயங்களில் அரசாங்க அதிகாரிகள் பலத்த சுயகட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டியிள்ளதை மறுப்பதற்கில்லை. சுயாதீனமாகப் பேசக்கூடிய அரசியல்வாதிகள், செய்தியாளர்கள் போல அவர்கள் வெளிப்படையாக தமது சொந்தக் கருத்துக்களை பேசுவது சிரமம். அதிலுள்ள கட்டுப்பாடுகள் புரிந்துகொள்ளப்படக் கூடியதே. ஆனால், இந்த விடயத்தில் எமது நோக்கு நல்லிணக்கந்தான் என்பதை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகம் கொஞ்சம் வெளிப்படையாகவே சமிக்ஞை காண்பித்துள்ளமை எமக்கு நம்பிக்கையைத் தருகின்றது.

பொதுவாக அரசாங்க அதிகாரிகள் இந்த விடயங்களில் அடக்கி வாசிக்க, சுயாதீனமாக உள்ள அரசியல்வாதிகளும்,



செய்தியாளர்களும் சிவில் சமூகமுமே உரத்துப் பேச வேண்டியிருக்கும். அழுத்தம் கொடுக்க வேண்டியிருக்கும். ஆனால், இங்கு சிவில் சமூகம் இந்த விடயத்தில் கொஞ்சம் தயக்கம் காட்டிய வேளையில் அரச அதிகாரிகள் குழாம் கொஞ்சம் கனதியாக பேசியுள்ளதாக "அரங்கம்" உணருகின்றது. வாழ்த்துக்கள் அரசாங்க அதிகாரிகளே. உங்களையிட்டு இங்கு பெருமைப்படுகிறோம். இங்கு நீங்கள் பேசவில்லை, ஆனால் நீங்கள் பேச நினைத்ததை நாம் புரிந்துகொள்கிறோம். உங்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள். நல்லிணக்கம் தொடர்பில் அடுத்த கட்டம் நோக்கி முன்னேறுங்கள் நாமும் கைகொடுப்போம். அடுத்த முறை தேவைப்பட்டால் கடுமையான விமர்சனங்களுடன் உங்களைச் சந்திக்கிறோம். நமக்கிடையிலானது காதலும் ஊடலும் கொண்ட உறவுதான். ஆனால் பிரிக்கமுடியாதது.

---

# அனர்த்தகால உளவியல் முதலுதவி - பகுதி 3

Dr. யூடி ரமேஸ் ஜெயகுமார்
உளநல மருத்துவர்.
வாழைச்சேனை வைத்தியசாலை

**ஆலோசனை வழங்குதல்**

அண்மையில் நடைபெற்ற குண்டுவெடிப்புகள், அதன் தொடர் நிகழ்வுகளால் பாதிக்கப்பட்ட தனி நபர்கள், குடும்பங்களுக்கு உதவியளிக்கும் போது ஆலோசனையளிப்பது தவிர்க்கப்பட முடியாதது. ஆலோசனை என்பது குறிப்பிட்ட ஒரு தேவைக்கு வழங்கப்படுகின்ற செய்யக்கூடிய மற்றும் செய்யக்கூடாதவை பற்றிய அறிவுறுத்தல்களாக அமையும். அத்துடன் அவ்வாலோசனை முடிந்துவிடும். (உதாரணமாக – அவசரகாலச்சட்டம், பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பாதுகாப்புச் செயற்பாடுகள், இழப்பீட்டு கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளும் முறைகள், வீட்டுத்திட்டம் பெற்றுக்கொள்ளும் முறைகள் பற்றி கூறுதல், காணாமல் போனோர் பற்றிய விசாரணைகளில் தகவல்களை வழங்கும் முறைகள்.) பிரச்சினையுடன் உங்களை அணுகியுள்ள பயனாளிக்கு ஆலோசனை வழங்க முடியாது. ஆனால் உங்களுடன் உரையாடிச் செல்லும் போது பயனாளி சில விடயங்களை கூறும்போது அவ்விடத்தில் பொருத்தமான ஆலோசனை ஒன்றை கூறலாம். (உதாரணமாக இந்த விடயத்தைப் பற்றி உங்கள் குடும்பத்துடன் கதைக்க வேண்டாம்). பொதுவாக உதவியளிக்கும் உதவியாளர்கள், பயனாளிக்கு ஆலோசனை வழங்குவதற்கு சில வேளைகளில் முற்படுவார்கள்.



இது பொதுவான ஒரு விடயமாகும். பயனாளியும் தனது பிரச்சினைக்கான தீர்வு நீண்டு செல்வதை விரும்புவதில்லை. குறுகிய காலத்திலேயே அப்பிரச்சினையில் இருந்து விடுபட வேண்டும் என்ற மனநிலையுடனேயே உங்களை நாடி வருகின்றார்கள். அத்துடன் அவர்கள் எதிர்காலம் குறித்த எந்த எதிர்பார்ப்புகளும் இன்றி, மனச்சோர்வுடன் இருக்கும்போது பிரச்சினைகளிற்கான முகாமைத்துவ இடையீடுகள் சவாலாக அமையும். இவ்வாறான வேளைகளில் பயனாளி தற்போதுள்ள பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கு உடனடியாக செய்யக்கூடியவை எவை என்பதைப் பற்றிய ஆலோசனைகளை வழங்குவது பொருத்தமானது.

பயனாளியை, உளநல மருத்துவரிடம் காட்ட வேண்டும் என்றால் அதற்கான தேவை குறித்த ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் அத்துடன் உதவியையும் செய்யலாம். இவ்வாறு செய்யும்போது பயனாளி உங்களது ஆலோசனையிலும், உங்களிலும் தங்கிவிடாதபடி பாதுகாத்துக்கொள்வது மிகமிக இன்றியமையாத விடயம். அல்லாது போனால் எதிர்காலத்தில் நீங்கள் உங்கள் பயனாளியின் பிரச்சினைகளிற்கான முகாமைத்துவ செயற்பாடுகளை செய்ய முடியாத ஒரு கையறு நிலை இதனால் ஏற்பட்டுவிடும். இவ்வாறான நேரங்களில், நீங்கள் உங்கள் பயனாளியிடமே சில கேள்விகளை கேட்பதன் மூலம், பயனாளி தனது பிரச்சனை குறித்த ஆலோசனைகளை தானாக பெற்றுக்கொள்ள உதவலாம். 'நீங்கள் இப்போது இருக்கின்ற நிலைமைபோல் உங்கள் உறவினர், நண்பர் ஒருவர் இருந்தால் என்ன ஆலோசனை கூறுவீர்கள்? அவர்கள் தங்களது பிரச்சினைகளுடன் தனிமைப்பட்டு, மனச்சோர்வுடன் இருக்கும் நிலைமைகளில்? உதவிகளை பெற்றுக்கொள்ள மனமில்லாத நிலைமைகளில்? அத்துடன் மற்றவர்களிற்கு சுமையாகி விடுவேனோ? என எண்ணும் போது? இவ்வாறான கேள்விகள் மூலம் தங்களது பதில் எவ்வாறு அமையும் என்பதை அறிந்து, அதற்கு ஏற்றாற்போல் அவர்கள் கேட்கும் கேள்விகளிற்கும் அவர்கள் ஊடாக பதிலை பெற்று, அவர்களது சந்தேகங்கள், கேள்விகளிற்கு அவர்களது பதிலே ஆலோசனையாக அமைய உதவலாம்.

**ஆலோசனை வழங்கும்போது எதிர்பார்க்கப்படுபவை**

பிரச்சினைகளிற்கான முகாமைத்துவ உதவியளித்தலின்போது வழங்கப்படும் ஆலோசனைகள் மூலம் பயனாளி உற்சாகத்துடன், சமூக ஆதரவை பெற்றுக்கொண்டு, நெருக்கீடுகளிற்கு தானாக முகாமைத்துவம் செய்யும் வழிமுறைகள் என்பவற்றை கற்றுக்கொள்வதும் உள்ளடங்கப்படுகின்றது. பயனாளிகளின் பிரச்சினைகளிற்கான முகாமைத்துவ செயற்பாடுகள் குறித்து கற்பிக்கும் போது, பயனாளி தனது பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கான வழிமுறைகள் எவை என்பதை தீர்மானித்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பயனாளி உபயோகமற்ற முறைகள் எவை என்பதையும் அறிந்து கொள்ளப்படும். (உதாரணமாக : சில தீர்வுகள் பயனாளியின் உணர்ச்சிகள், உடல் நலன் என்பவற்றையும் பாதிக்கலாம்) நீங்கள் பயனாளிக்கு எந்த தீர்வுகள் நன்மையானவை? எவை தீமையானவை என்பதை அவராக உணர்ந்து கொள்ள உதவ வேண்டும். பிரச்சினைகளை கையாள்வதில் பாதகமான வழிமுறைகள் எவை என்பதை உங்களது பயனாளி உணர்ந்த கொள்வதற்கு ஏதுவாக அவரிடமே சில கேள்விகளை கேட்டு, அதற்கு அளிக்கப்படும் பதிலைக் கொண்டே

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# அகவை 90 இல் அமரர் சாரங்கபாணி

**மட் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபரும் மட்டுநகர் பெற்றெடுத்த மாண்புறு கல்வியியலாளருமான அமரர் ஐ. சாரங்கபாணி அவர்களின் 90வது அகவையை ஒட்டிய சிறப்பிதழ்)**

**23 - 04 - 1929**
**---**
**11 - 03 - 2005**



## அமரர் ஐயாத்துரை சாரங்கபாணி (முன்னாள் அதிபர்) அவர்களின் நினைவலைகள்

அமரர் ஐயாத்துரை சாரங்கபாணி அவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்விப்புலத்தில் மறைக்கப்படமுடியாத ஒரு கல்வியாளர் ஆவார். 1980களில், மட்/கோட்டைமுனை மகா வித்தியாலயமாக இருந்த (இதற்கு முன்னர் மட்/ அரசினர் கல்லூரி) தற்போதைய மட்டக்களப்பு இந்துக் கல்லூரியின் சிறந்த அதிபராக சேவையாற்றிய ஒரு பெருந்தகையாவார். மட்டக்களப்பு நகரின் புறநகர் பகுதியைச் சேர்ந்த வறிய மாணவர்களினது கல்வியினை ஊக்குவிப்பதிலேயே அவருடைய பங்களிப்பு அளவிடற்கரியது. 1978ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாநகரை சூறாவளி தாக்கிய போது இப்பாடசாலையினை மீள புனர்நிருமாணம் செய்வதிலும், மாணவர்களது கல்வி நடவடிக்கையினை தடையுறாவண்ணம் கட்டியெழுப்புவதிலும் அளப்பரிய பங்கினை ஆற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்வித்துறை மட்டுமின்றி விளையாட்டுத் துறையிலும் மாணவர்களை ஊக்குவித்து நகர்ப்புறப் பாடசாலைகளுக்குச் சமமான போட்டிகளில் தமது கல்லூரி மாணவர்களையும் ஊக்குவித்து வளப்படுத்தி கொடுக்கப்பட்ட பணியினைச் சிறப்பாக ஆற்றினார். போட்டிகளில் மாணவர்கள் ஈடுபடும் போது மைதானத்திற்கு வருகைதந்து அவர்களை ஊக்கப்படுத்தி பல அடைவுகளைக் கோட்ட மட்டத்திலும், வலய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் பெறுவதற்குப் பல வழிவகைகளை மேற்கொண்டிருந்தார்.

பாடசாலைக்கு வெளியிலும் சமூகத்திற்கு சமூக சேவைகள், மொழி, சமயம், கலாசாரம் போன்ற செயற்பாடுகளிலும் மாணவர்களை ஈடுபடுத்தி ஊக்குவித்த பெருமையும் இவரைச் சாரும். இன்று பல்வேறு நாடுகளிலும், பல்வேறு பிரதேசங்களிலும் வாழ்ந்துவருகின்ற உயர்பதவிகளை வகிக்கின்ற பலர் அன்னாரது கற்பித்தலில் - வழிகாட்டலில் தங்களை உயர்த்திக் கொண்டவர்கள் என்பதை சிறப்பாக கூறிக்கொள்ள முடியும். அந்த வகையில் நானும் அவரின் மாணவன் என்பதில் எனக்குப் பெருமிதமாக இருக்கிறது என்று சொல்வதில் மகிழ்ச்சி மனத்தில் நிறைகிறது.

அவருடைய பூதவுடல் மறைந்திருந்தாலும் அவரது பணிகளும் இன்றும் பல்வேறு நாடுகளிலும் பிரதேசங்களிலும் அரது மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**மா.உதயகுமார்,**
அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளரும்,
மட்டக்களப்பு.

## கண்டிப்பும் கவனிப்பும் கனிவும் கொண்ட கல்வியியலாளர் சாரங்கபாணி சேர்

இப்போது மாறை/ஸாஹிரா மகா வித்தியாலயம். 1956, 1957களில் அதன் பெயர் வெலிப்பிட்டிய முஸ்லிம் வித்தியாலயம். வெள்ளையுடை, வேட்டி, திருநீறு, பொட்டு. இவை யாவும் சாரங்கபாணி சேர் அவர்களை இனங்காட்டும் அடையாளங்கள். மாணர்களிடம் காட்டிய அன்பும் கண்டிப்பும் காரணமாக அவரை நம் எல்லோருக்கும் பிடித்துவிட்டது. மனத்தில் பதிந்த நல்லாசான். மாணவர்களைக் கல்வியின்பால் ஊக்குவித்த அழகு, தனியழகு.

அக்காலத்தில் இக்கிராம மக்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டாத காலம். தலைநிமிர்ந்து வாழ வேண்டுமெனில் கல்விதான் ஒரேவழி என்று எம்மக்களுக்கு அறிவுரை கூறி வழிகாட்டிய பெருந்தகை. வெளியிடங்களில் இருந்து வந்த பல ஆசிரியர்கள் இங்கு சேவை செய்திருந்தாலும் எல்லோரையும்விட அவரிடமிருந்த நற்பண்புகள் எம்மை அவர்பால் ஈர்த்தது. அக்காலத்தில் சாரங்கபாணி சேரைத் தெரியாதவர்கள் எம்மூரில் இருக்கமுடியாது. மேலும் அவரது குரல், கம்பீரமான தோற்றம், அஞ்சாத நெஞ்சம் என்று இன்னும் அவரின் பெருமைகளைக் கூறலாம்.

“கற்க வருக. சேவைக்குச் செல்க. பாங்குடன் பயின்று பண்பாடு எய்துக.” என அவரால் பாடசாலைச் சுவரில் எழுதப்பட்ட வாசகம் அழிந்துவிட்டாலும் என் மனத்தில் ஊன்றிப் பதிந்துள்ளது. இது அவரது வாசகம். இதைப் பல இடங்களில் மேற்கோளாக நான் காட்டுவதுண்டு. அவரின் அறிவுரையைப் பின்பற்றியபடியால் ஆசிரியராக வர என்னால் முடிந்தது. பாகுபாடு காட்டாத – ஏற்றத்தாழ்வு பார்க்காத பண்புள்ள நல்லாசான். இப்படிப்பட்டவர்கள்தான் ஆசான்களாக வர வேண்டும். இடைவெளி இல்லாத அன்புநிறைந்த ஆசிரியர் மாணவர் உறவை நினைத்தால் அந்தக்காலம் மீண்டும் வராதா என எண்ணத் தோன்றுகிறது. இவரிடம் படித்ததையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

**எம்.எல்.கலீல்,**
ஓய்வுநிலை ஆசிரியர்,
வெலிகமை.

## நானும் சாரங்கபாணி சேரும்

கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு விரிவுரையாளராக வந்த புதிதில் - 1991இல் - இலக்கியத் தாகம் காரணமாக மட்டக்களப்புத் தமிழறிஞர்கள் பலருடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டேன். அவ்விதத்தில் அதிபர் வித்துவான் சா.இ.கமலநாதன், ஆசிரியர் எஸ். சிவசுப்பிரமணியம், மகா வித்துவான் எவ்.எக்ஸ்.சி.நடராசா ஆகியோர் வரிசையில் அதிபர் ஐ.சாரங்கபாணி சேரும் ஒருவரானார். முன்னையோருடன் இணைப்பை ஏற்படுத்தியவர் பேராசிரியர் சி.மௌனகுரு. சாரங்கபாணி சேருடன் உறவு ஏற்பட வழிவகுத்தவர் நண்பர் த.யுவராஜன்.

பயிற்சியாசிரியராகவும் உள்வாரிப் பட்டதாரி ஆசிரியராகவும் திகழ்ந்த சாரங்கபாணி சேருடன் எனக்கு ஏற்பட்ட தொடர்பு காரணமாக மட்டக்களப்புச் சமூகம் பற்றியும் கோயிற் சடங்குகள் பற்றியும் நட்டார் வழகாறுகள் பற்றியும் மட்டக்களப்புக் கல்வி வளர்ச்சி பற்றியதுமான பல விடயங்களை அறிந்கொள்ளும் அரிய வாய்ப்பு ஏற்பட்டமை எனது நற்பேறே.

மட்/இந்துக் கல்லூரி அதிபர், மட்டக்களப்பு மாவட்டத்துக்கான தமிழ்ப் பாடச் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், மட்/அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பகுதி நேர விரிவுரையாளர்(தமிழ்) என ஒரே காலத்தில் மூன்று சிலுவைகளைச் சுமந்து திறம்படக் கடமையாற்றி நற்பெயர் பெற்றமை பற்றி அறிய நேரிட்ட போது அவரது நிருவாகத் திறன் முதலியன என்னை வியப்பில் ஆழ்த்தியமை பொய்யுரையன்று.

அவரது மாணவர்களாகிய அதிபர் மு. இராசரத்தினம் முதலானோரது புலமைத் திறன், நயீமா சித்தீக் முதலான எழுத்தாளரது படைப்பாற்றல் திறன் முதலானவைகளில் சாரங்கபாணி சேரைக் கண்டுகொள்ள முடியுமென்று நம்புகிறேன். மேலும், அன்னாருடன் பழகிக் கிடைத்த வாய்ப்புத் தரும் மனநிறைவு மகத்தானது என்பதில் ஐயமில்லை.

**கலாநிதி செ.யோகராசா,**
ஓய்வுநிலைப் பேராசிரியர்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

## ஆறு மாதங்களில் என்னை அசத்திய அதிபர் சாரங்கபாணி சேர்

2019இல் 90ஆவது அகவையில் நினைவுகூரப்படுகின்ற மனிதருள் மாணிக்கமாய் மதிக்கப்படத்தக்க சிறந்த அதிபர் திரு.சாரங்கபாணி (அமரர்) ஐயா அவர்களைப் பற்றி நான் எனது உள்ளடக்கிடக்கையை வெளிப்படுத்துவதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. நான் என்ன அதிகாரியா? இல்லையே. நான் ஓர் அலுவலகப் பணியாளன். ஆனால் என்னிடமும் அவர் பற்றிய நினைவுப் பதிவுகளைத் தருமாறு கேட்கிறார்களென்றால் அவர்களின் குடும்பத்தைப் பற்றி நான் என்ன நினைப்பது? சாரங்கபாணி சேரைப் போலவே அவரின் குடும்பமும் உயர்ந்த மனங்கொண்டது.

நான் 1982இல் மட்/இந்துக் கல்லூரிக்கு (அப்போது மட்/கோட்டைமுனை ம.வி) முதன்முதலாக வேலைக்காக வந்து சேர்ந்த போது திரு.சாரங்கபாணி ஐயாதான் இக்கல்லூரியின் அதிபர். அவர் அன்று என்னை இன்முகத்துடன் வரவேற்றார். அலுவலகப் பணியாளன் என்பதற்காக என்னிடம் ஏற்றத்தாழ்வு காட்டியதில்லை. “மகன்” என்றுதான் அழைப்பார். ஒருவரிடம் எப்படி வேலை வாங்க வேண்டும் என்பதில் அவருக்கு நிகர் அவரே. அவர் ஒரு வித்தியாசமான மனிதர். வித்தியாசமான நிருவாகம். மாணவர்களிடத்தே கண்டிப்பும் அதே நேரம் கனிவும் இருக்கும். அவர்மீது மாணவர்களும் பெற்றோரும் ஆசிரியர்களும் மேலதிகாரிகளும் மிகுந்த மரியாதை கொண்டிருந்தமையை நான் பல தடவை கண்டிருக்கிறேன். நியாயத்தைக் கதைப்பதில் அவர் எவரிடமும் அச்சம்கொண்டதே இல்லை. மட்டக்களப்பு மாவட்டக் கல்விப் பணிமனையில் மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களின் அலுவலகப் பணியாளனாக 22வருடங்களாகக் கடமைபுரிந்த காலங்களில் தைரியமுடன் செயற்படும் போது நான் சாரங்கபாணி ஐயாவை நினைத்துப் பெருமைப்படுவேன். ‘தைரியமுடன் கடமைபுரிதல்’ என்பதை நான் அவரிடம் கற்றுக்கொண்டவன்.

வெள்ளை அரைக்கை சேர்ட். எட்டுமுழ வேட்டிதான் உடுத்தியிருப்பார். எளிதில் கோபப்படமாட்டார். கோபப்பட்டால் அவரின் முகத்தைப் பார்க்க முடியாது. அன்னாரது பிள்ளைகள் அனைவருமே இங்குதான் கல்வி கற்றவர்கள். அவர்கள் நல்ல பதவியிலும் நன்றாகவும் இருக்கிறார்கள். காரணம் அவரின் வஞ்சகமில்லாத மனம். அவரைப் பொறுத்தமட்டில் அதிபர் பதவி வெறும் பதாகைதான்(வோட் பலகை). அவர் பட்டம் பதவி, கௌரவம் எதையும் பார்க்காதவர். ஆனால் இப்போதெல்லாம் பட்டம் பதவி, கௌரவம், போட்டி பொறாமைதான் தலைதூக்கி நிற்கின்றன.

என்னை அவர் ‘மகன்’ என்றுதான் அழைப்பார். நான் அவரது நிருவாகத்தின்கீழ் வேலை செய்தது ஆறு மாதங்கள்தான். ஆனால் ஆறு வருடங்களுக்குச் சமமானது. நானும் அவரது பிள்ளையாகத்தான் இருந்தேன். மட்/இந்துக் கல்லூரியிலேயே நான் அடுத்த வருடம் ஓய்வுபெறுகிறேன். இதையும் ஒரு பேறாகவே கருதுகிறேன்.

**அன்பு மகன் இ.இராஜதேவன்,**
மட்/இந்துக் கல்லூரி,
மட்டக்களப்பு.

# என் பார்வையில் அமரர் ஐயாத்துரை சாரங்கபாணி அவர்கள்

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம்மிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே.

சமூகத்தில் ஆறறிவு படைத்தவர்களாகப் பிறந்துவிட்டோம். ஆனால் ஆறாவது அறிவை எத்தனை பேர் பயன்படுத்துகிறோம் என்பது வினாக்குறியே. வேகமாக ஓடும் இவ்வுலகில் சமூகத்திற்காக வாழும் பண்புள்ள நல்ல மனிதர்களைச் சந்திப்பது, அருமையிலும் அருமை. அதிலும் தற்துணிவுள்ள தைரியம் மிகுந்த நல்லவற்றுக்காக நினைத்ததைச் செய்யும் ஆற்றல் கொண்ட பாசம் மிகுந்த பக்தியுடைய மனிதர்களைக் காண்பது அரிது.

அத்தகைய அரிய மனிதராக எனது ஐந்தாவது வயதில் என் அக்காவின் கணவராக எங்கள் குடும்பத்துடன் இணைந்துகொண்டவர்தான் அத்தான் சாரங்கபாணி அவர்கள். நான் அவர் பெயரை என்றுங் கூறியதில்லை. எழுதும் போது கஷ்டமாகவுள்ளது.

திடகாத்திரமான உடற்பாங்கு, தனக்குப் பிடித்தவர்களுக்கு மரியாதை கொடுக்கும் பண்பு, எதற்கும் முகம்கொடுக்கும் தைரியம், பயமற்ற போக்கு, அஞ்சா நெஞ்சன், எந்தவொரு விடயத்தையும் சாதாரணமாக எடுத்துக்கொள்ளும் இயல்பு, பதற்றம் இன்றிய செயற்பாடு என்ற பல விடயங்களுக்குச் சொந்தக்காரரான இவர் எங்களுக்கு ஆசிரியராக அறிமுகமானார். கல்வி கற்பிப்பதில் சிறந்த ஆசான். சிறுவர்களாக நாங்கள் இருந்த போதே எங்களுக்குக் கற்பிப்பதில் ஆர்வம் காட்டியவர். கற்றலில் எமக்கு ஊக்கம் காட்டியவர். நான், அக்காலத்திலேயே புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெறுவதற்கு அவரும் ஒரு காரண கர்த்தா.

மிகுந்த கோபக்காரன். நியாயமற்ற விடயங்கள் அரங்கேறும் போதே அவர் மிகுந்த கோபக்காரன். நீதி நியாயத்தை நிலைநாட்ட எதையும் கூறத் தயங்கமாட்டார். தன் மனைவிமீது மிகுந்த அன்பு கொண்டவர். இவரின் மனைவி என் அக்கா மகேஸ்வரியும் இவருக்கு மிகுந்த அனுசரணையானவர். ஒன்பது குழந்தைகள். பெண்கள் இரண்டு பேர், ஆண்கள் ஏழு பேர். எதற்காகவும் அத்தானுடன் அக்கா முரண்படவேமாட்டார். அவர் சொல்வது அக்காவுக்கு வேத வாக்கு. அவரின் குழந்தைகள் அவரின் சொல்லை மீறியதே கிடையாது. நாங்களும்கூட. சிறுவயது முதல் நான் பேச்சுப் போட்டிகளில் கலந்துகொள்வதுண்டு. அதற்கான பேச்சுக்களில் பெரும்பகுதி என் அத்தானால் எழுதித் தரப்பட்டவையே. அதன் மூலம் எனது பாடசாலைக் காலங்களில் பெருந்தொகையான பரிசில்களையும் பெற்றுக்கொண்டேன். பரிசில் கிடைத்ததும் பெருமகிழ்ச்சி கொள்வார். பாராட்டி ஊக்குவிப்பார். இந்த ஊக்குவிப்பு என்னை ஒரு பேச்சாளியாக மாற்றியுள்ளது. அதையிட்டு நான் பெருமைப்படுகிறேன்.

மற்றுமொரு சம்பவம். நான் உயர்தர பரீட்சையில் சித்தி பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான போது முதன்முதலில் என்னை எனது தந்தையாருடன் கண்டிக்கு அழைத்துச் சென்றார். வழியில் பொல்காவலையில் ராக்கிங் ஆரம்பம். எனது தந்தை பயந்தார். ஆண் மாணவர்கள் எங்களை ராகிங் செய்த போது எனது தந்தையிடம் இவ்விடத்தில் நாம் இருக்கக்கூடாது வாருங்கள் என மறுபக்க வேறு ரெயில் பெட்டிக்கு அழைத்துச்சென்றார். இடையிடையே வந்து எங்கள் ரெயில் பெட்டியை பார்த்து தைரியம் தருவார். விடுமுறைக்கு வரும் போதும் என் படிப்புநிலை பற்றி கேட்டறிந்து கொள்வார். என்னை மட்டுமல்ல தன்னிடம் கல்விகற்கும் எல்லா மாணவர்களையும் ஊக்கப்படுத்திக் கொண்டேயிருப்பார். நல்லாசிரியராக அவரைக் கண்டேன்.

மட்/ கோட்டைமுனை மகா வித்தியாலயத்திற்கு அதிபராக வந்ததும் அப்பாடசாலையை இந்துக் கல்லூரியாக பெயர் மாற்றம் செய்த பெருமை சாரங்கபாணி அத்தானுக்குரியது. அதிகாரிகளைக் கண்டு பயப்படாத அதிபர். யாராவது அதிகாரிகள் நியாயமற்ற பொருத்தமற்ற விதத்தில் பொறுப்புக்களை ஒப்படைத்து விட்டுக் கதைத்தால் பாடசாலைத் திறப்பை அதிகாரிகளின் முன் மேசையில் வைத்துவிட்டு வெளியேறிவிடுவார். பின்னர் அந்த அதிகாரிகளே அவரிடம் கையளித்தவிடுவர். அதற்கு காரணம் அவரிடமிருந்த வெளிப்படைத்தன்மை, நேர்மை, சமூகத்தில் அவருக்கு இருந்த பெரும் மதிப்பு. இவரால் இக்கல்லூரியிலுள்ள ஸ்ரீ தண்டாயுதபாணி முருகன் ஆலயம் சீராக நிருமாணிக்கப்பட்டது. அவரின் உத்தம ஆத்மா எருக்கும் கஷ்டம் கொடுக்காமல் இப்பூவுலகைவிட்டு நீங்கியது. கல்விச் சமூகம் உள்ளவரை இந்துக் கல்லூரி உள்ளவரை அவர் புகழ் என்றும் நிலைத்திருக்கும்.

**திருமதி சுபா. சுக்கரவர்த்தி**
ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர்,
மட்டக்களப்பு.

# நெஞ்சில் நிறைந்த பெருந்தகை வஞ்சகம் இல்லாக் குறுந்தொகை

ஆசிரியம் என்பது தொழிலல்ல; அது அற்புதமான சேவை. ஆசிரியர்கள் வெறும் ஊதியத்துக்காக ஊழியம் செய்பவர்களல்லர். இருமுது குரவர்களுக்கடுத்ததாய் இறைவனுக்கு முன்னோனாய் இருப்பவன் ஆசிரியன் - இல்லையில்லை – நல்லாசிரியன். "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்பது வெறும் வாய் வார்த்தைகள் அல்ல. ஒரு நல்லாசிரியன் என்பவன் விளக்கேற்றும் விளக்காவான். வழி தெரியாது தடுமாறும் கப்பலுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காவான். தாரமும் குருவும் தலைவிதிப் பயன் என்பதற்கமைய நல்லாசிரியன் கிடைப்பது ஒருவனின் நல்லதிஷ்டமாகும்.

மேற்கண்ட விளக்கங்களுக்கு மேலாக உயர்ந்து நின்று ஆண்டுகள் பல கடந்தாலும் அன்று கற்ற மாணவர்களின் மனமேடைகளிலே கம்பீரமாக அமர்ந்து காட்சி தருபவர் அமரர் அருமை ஆசான் திரு.ஐ.சாரங்கபாணி அவர்கள்.

எனது எண்ணப் பறவை சிறகடித்துப் பின்னால் பறக்கிறது….

பசுமை நிறைந்த பசறை நகரில் செழிப்பான தேயிலைச் செடிகளுக்கு மத்தியிலே சாரங்கபாணி சேரைப் போலவே கம்பீரமாகக் காட்சி தந்த பசறை மத்திய கல்லூரி… காலையில் சிங்களப் பிரிவும் மாலையில் தமிழ்ப் பிரிவுமாக இயங்கிவந்த கல்லூரி. அறுபதுகளிலே அங்கு வந்து சேர்ந்தவர்தான் சாரங்கபாணி சேர் அவர்கள். தூய்மையான வெள்ளை வேட்டியும் தூய்மையான அரைக்கை சேர்ட்டும்தான் உடுத்துவார். பாடசாலை நேரங்களில் அவர் நிற உடைகள் உடுத்தியதை நாம் கண்டதே இல்லை.

அவரது பாடம் தமிழ். ஏனைய ஆசிரியர்களைப் போல அவர் பாடத்திட்டத்தை முடித்துவிட்டு நிம்மதியாக இருந்தவரல்லர் அவரால் அப்படி இருக்கவும் முடியாது. கண்டிப்போடு கருணையும்மிக்க அவரைப் போன்ற நல்லாசிரியர்களைக் காண்பதே அரிதாகும்.

அவர் வகுப்புக்குள் நுழைவது இன்றும் என் கண்முன் தெரிகிறது. அத்தனை கம்பீரம். "வணக்கம்" கூறி அமர்ந்ததும் பல நாட்கள், அவர் வகுப்பு மாணவனான பாலகிருஷ்ணனை அழைத்துப் பாடச் சொல்வார். கம்பீரமான குரலில் பாலகிருஷ்ணன் பாடுவான். வகுப்புக்கே ஒரு புதுத் தெம்பு வந்துவிடும். கும்பகர்னன் வதைப்படலம், பண்டைத் தமிழர் பண்பாடு, மலரும் மாலையும், திருவிளையாடற் புராணம் - ஆகிய இலக்கிய நூல்களோடு இலக்கணம், ஆக்கம் என்று அனைத்தையும் எந்தவிதமான இடர்ப்பாடுகளும் இல்லாமல் கற்பித்தவர்.

இலக்கணத்தை அவர் எவ்வளவு இலகுவாக - நாசூக்காக எப்படித்தான் கற்பிப்பாரோ… எனக்கு அது இன்னமும் புரியவில்லலை. அது அவருக்கு ஆண்டவன் கொடுத்த கொடை என்றுதான் சொல்ல வேண்டும். ஒன்பதாம் பத்தாம் வகுப்புக்களில் படிக்கும் போதே இலக்கண முறைப்படி எங்களுக்கு வெண்பா எழுத முடிந்ததென்றால் அவரின் கற்பித்தல் திறனை அறிந்துகொள்ள முடியுமல்லவா?

எங்கே என்ன கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடந்தாலும் தேடிக்கொண்டு வந்து பங்குபற்ற வைத்துவிடுவார். பசறை கலைமகள் பதிப்பகத்தார் நடத்திய கட்டுரைப் போட்டியில் (தமிழ்மணி கவிஞர் தமிழோவியன் நிறுவியது) நான் பங்கு பற்றி முதற் பரிசாகத் தூக்கமுடியாத புத்தகப் பரிசில்களைப் பெற்ற பசுமையான நினைவை என்னால் மறக்கத்தான் முடியுமா? அது மட்டுமா? "மலையகத்தின் நிலையுயர" என்ற தலைப்பில் நான் எழுதிய கட்டுரையை கண்டி க.ப.சிவம் அவர்கள் வெளியிட்ட 'மலைமுரசு' சஞ்சிகையில் வெளிவரச் செய்து எனது எழுத்துலகப் பிரவேசத்திற்கு வாயிலைத் திறந்து விட்ட என்னருமை ஆசான் சாரங்கபாணி சேரை மறக்கவே முடியாது.

அடிக்கடி அவராகவே போட்டிகளை வைப்பார். அவரது சொந்தச் செலவிலேயே புத்தகங்களைப் பரிசாக வாங்கிக்கொடுப்பார். வகுப்பிலே வாதத் திறமைகளை வளர்க்க **மாதிரிப் பாராளுமன்றம்** ஒன்றை உருவாக்கினார். நினைக்கவே இனிக்கும். காரசாரமான வாத விவாதங்கள்…. சபைக்கூச்சம் போய் அவையில் அச்சமின்றி எழுந்து பேசும் திறன் பெற்றோம்.

நான் விடுதியில் தங்கிப் படித்தவள். ஒரு நாள் என்னை அழைத்து பென்னம்பெரியதோர் மொனிட்டர்ஸ் அப்பியாசப் புத்தகத்தை வாங்கித் தந்து நல்ல நூல்களை வாசித்து, "அவற்றில் உமக்குப் பிடித்தமானவற்றை இதில் எழுதுங்கள். சீக்கிரமே முழுக்கவும் எழுதி எனக்குத் தரவேண்டும்." என்ற அன்புக்கட்டளை இட்டார். அந்தக் கொப்பியை நிரப்புவதற்காகவே வாசித்தேன்…வாசித்தேன்…நிறைய வாசித்தேன்.. என்னைக் கவர்ந்த வாசகங்களை எழுதினேன். இடைக்கிடையே எனது சொந்தக் கருத்துக்களையும் எழுதி அதன் கீழே "யாரோ" என்று போட்டுவிடுவேன். மு.வ, அகிலன், கல்கி, கி.வா.ஜ. லக்ஷ்மி என்று எல்லா எழுத்தாளர்களது நூல்களையும் வாசித்து முடித்தேன். என்னை அறியாமல் எழுதும் ஆற்றல் வளர்ந்தது. வளர்ந்தது என்று சொல்வதைவிட அந்த ஆசிரியப் பெருந்தகையான சாரங்கபாணி சேர் வளர்த்துவிட்டார் என்று கூறுவதே பொருந்தும்.

ஒன்பதாம் வகுப்பாரைப் பத்தாம் வகுப்பாருடன் போட்டி போடவைப்பார். தமிழ் இலக்கணம், தமிழ் இலக்கியம், நூலாசிரியர்கள் பற்றிய கேள்விகள்தான போட்டி. அது போட்டியா! பெரும் போட்டிகள்.

பாடங்களில் மாத்திரமா அவர் வழிகாட்டி? இல்லை……இல்லை ………..எனது தந்தையுடன் தொடர்பை வைத்திருந்தார். என்னை இடைநிறுத்தம் செய்துவிடாமல் தொடர்ந்து படிக்கும்படி அடிக்கடி கூறுவார்.

ஐ.சாரங்கபாணி என்று அவர் தமிழில்தான் கையெழுத்திடுவார். நாங்களும் தமிழில் கையெழுத்திடப் போட்டி போடுவோம். சாரங்கபாணி சேரை நினைத்தால் அக்காலத்தில் நடந்தேறிய முத்தமிழ் விழாக்களை நினைக்காமல் இருக்க முடியாது . இயல் இசை நாடகமென மூன்று முழு நாட்களாக முத்தமிழ் விழா கலகலக்கும்.

தமிழ்ப்பிரிவு சிங்கள அதிபரின் கீழ்தான் இயங்கியது. தமிழ்ப்பிரிவில் குறைவான மாணவர்கள்தான்… வளமும் குறைவு…. ஆனால் வருடந்தோறும் பெருவிழாவாக முத்தமிழ் விழா….. இது அன்னாரின் சாதனை. அக்காலத்தில் இருந்த எத்தனை பேச்சாளர்களை அவர் அழைத்திருப்பார்………… பக்கீர்தம்பி, அ.ஸ.அந்துஸ் ஸமத்…….. மன்னாரிலிருந்து வந்து வித்துவான் ரஹ்மான் "வீரவாள்" என்ற நாடகத்தை மேடையேற்றினார். ஒருமுறை நாங்கள் வானொலி நிலையத்திலிருந்து " மோகனப் புன்னகை" என்ற நாடகப்பிரதியை பெற்று மேடையேற்றினோம். இவையெல்லாம் பல தசாப்தங்கள் கடந்தும் பசுமையான நினைவுகளாக நம்மில் நிலைத்துவிட்டன.

ஆசிரியர் என்பவர் பாடப்புத்தகங்களோடு தனது பணியை நிறுத்திக் கொள்ளக்கூடாது என்பதற்கும் மாணவர்களின் எல்லாவிதமான திறமைகளையும் வளர்த்து அவர்களைச் சிறந்த ஆளுமை உள்ளவர்களாக வளர்த்து ஆளாக்க வேண்டும் என்பதற்கும் வாழ்ந்து காட்டிய வள்ளலாக இருக்கும் எமது ஆசிரியப் பெருந்தகை சாரங்கபாணி ஐயா அவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் சுவன வாழ்வை கொடுப்பானாக. இன்று எழுத்துலகில் - கல்வியுலகில் தலைநிமிர்ந்து நிற்பதற்குக் காரணம், அன்று தலைகுனிந்து புத்தகங்களை வாசித்தமையே. அதற்கான முழு உரிமையும் சாரங்கபாணி ஐயாயையே சாரும் என்பதில் எனக்கொரு பெருமிதம். எம் நெஞ்சில் நிறைந்த பெருந்தகையே! நீங்கள் அமரத்துவம் அடைந்து விட்டீர்கள். எம் உயிருள்ளவரை உம்மை மறவோம்…. மறவோம்…. மறவோம்…….

**இலக்கியத் தாரகை, கலாபூஷணம் நயீமா சித்தீக்,**
ஓய்வுநிலை ஆசிரியை,
கம்பளை.

## சரித்திரமான சாரங்கபாணி

மட்டக்களப்பில் கல்விப்பயிர் வளர்த்த பெரியார்கள் வரிசையில் எண்ணமும் செயலும் ஒன்றாய்க் கொண்டு இயங்கியவர், திரு.ஐயாத்துரை சாரங்கபாணி (அமரர்) அவர்களாவார். 1979ஆம் ஆண்டு முதல் அவர் இறக்கும் வரை அவருடன் கருத்தாடல்களை மேற்கொண்டவன் நான். அதன் போது பெற்றுக்கொண்ட கருத்துக்கள் பல. யதார்த்த முடிவுகளை அச்சமின்றி எடுக்கும் துணிவு அபாரம். இப்படியாக அவர்தம் திறமைகள் நீளும்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்குப் பாட ரீதியாக ஆசிரிய ஆலோசகர்கள் ஒவ்வொருவர் இருந்த அந்த நாள்களில் தமிழ்ப் பாடத்துக்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், மட்/இந்துக் கல்லூரி (அவ்வேளை மட்/ கோட்டைமுனை மகா வித்தியாலயம்) அதிபர், மட்/அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பகுதி நேர விரிவுரையாளர்(தமிழ்) என மூன்று பணிகளையும் முறையுறச் செய்த தமிழாசான் திரு. சாரங்கபாணி ஐயா அவர்கள். ஒரு பணியைச் செய்யவே முடியாமல் ஒதுங்குவதற்கு இடம்தேடும் பலரைச் சமூகத்தில் காணலாம். அவ்வாறன்றி மூன்று பணியென்ன முப்பது பணிகளையும் செய்வதற்கான ஆர்வமும் ஓர்மமும் கொண்ட ஒருவராகத் திரு.சாரங்கபாணி ஐயா அவர்களை நான் இனங்காண்கிறேன்.

மட்/புல்லுமலை றோ.க.த.க.பாடசாலையில் க.பொ.த.(சா.த) பரீட்சையில் சித்தியடைந்த 13 மாணவர்களுக்காக க.பொ.த.(உ.த) கற்பதற்கு அனுமதி கோரி வந்த போது பிரபல்யமான பாடசாலைகளாகத் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் இரண்டு பாடசாலைகள் மூன்று மாணவர்களை மட்டுமே சேர்த்துக்கொள்ள முன்வந்தன. மீதி பத்து மாணவர்கள் பற்றி நினைக்கும் போது கவலையாக இருந்தது. அந்த நேரத்தில் என் நினைவுக்கு வருகிறார், சாரங்கபாணி ஐயா. நம்பிக்கையுடன் அவர்களை அணுகினேன். வெற்றிக் கனி கையில் வந்தது. மாணவர்கள் அனைவரையும் வரவேற்று, இருக்கை அளித்து, தேநீர் உபசாரம்செய்து எல்லோரையும் சேர்த்துக்கொள்ள முன்வந்தார். அவ்வேளை "இவர்கள்" எல்லோரும் பல்கலைக்கழகம் செல்லாவிட்டாலும் நம் சமூகத்தையும் தம்மமையும் வளப்படுத்தும் ஒரு நல்ல தொழிலில் இருப்பார்கள் என்றார். உண்மையில் அவர் சொன்னவாறே அது நடந்தது. அவர்கள் ஆசிரியர்களாக இருக்கிறார்கள்.

ஏற்றத்தாழ்வு பாராட்டாது அனைவரையும் தன்பிள்ளைகளைப் போல நேசித்த ஐயா, சுனாமியின் போது மட்/இந்துக் கல்லூரியில் வந்து தங்கினார். முன்னாள் அதிபர் என்ற வகையிலும் என் அன்புக்குரியவர் என்ற வகையிலும் கல்லூரியின் நூலக அறையை வழங்க முன்வந்த என்னைத் தடுத்து மறுத்ததோடு அமையாது மற்றவர்களைப் போல் தங்கினார். சக மனிதர்களைத் தன்னைப் போல நினைத்து கோட்பாட்டு ரீதியாக அன்றிச் செயற்பாட்டு ரீதியாக வாழ்ந்துகாட்டிய அன்னாரிடம் மட்/அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தமிழ் கற்கும் பேற்றைப் பெற்றவன் என்ற வகையில் பெருமிதம் அடைகின்றேன்.

**மு.இராசரத்தினம்,**
ஓய்வுநிலை அதிபர்,
மட்/ இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு.

## ஆசிரியர் – மாணவர் உறவுக்குப் புது அர்த்தம் கொடுத்த ஆசான் அமரர் சாரங்கபாணி ஐயா

மாணவர்களுடன் மிக உன்னதமான உறவைப் பேணிக்கொண்டு அவர்களுக்குப் பாடம் புகட்டுவது என்பது, இலகுவான காரியமல்ல. ஆனால் இறுக்கமான நிபந்தனையற்ற உறவைப் பேணிக்கொண்டு மாணவர்களின் கல்வித் தாகத்துக்கு அறிவு எனும் அமுதம் ஊட்டி கல்வியால் சமூகத்தில் மேன்மையடைந்த மனிதர்களாகப் பலர் உருவாகத் தன்னலம் கருதாமல் உழைத்த ஆசிரியர்கள் சிலர் வாழ்ந்து மறைந்துள்ளார்கள். அத்தகையோரின் ஊனுடம்பு மறைந்தாலும் புகழுடம்பு மறையாமல் அவர்கள் வாழ்கின்றனர். அவர்களுள் தனியிடம் பெற்றவர்தான் அமரர் எமது ஆசான் சாரங்கபாணி ஐயா அவர்கள்.

1972 – 1979இற்கு இடைப்பட்ட காலத்தில் மட்/கோட்டைமுனை மகா வித்தியாலயத்தில் (இப்போதைய மட்/இந்துக் கல்லூரி) இடைநிலை வகுப்புக்களிலும் உயர்தரத்திலும் நான் கல்வி பயின்ற காலத்தில் ஓர் சிறந்த ஆசிரியராகவும் அதிபராகவும் சேவையாற்றிப்
பலநூறு மாணவர்களின் மனங்களில் நீங்காத நினைவைப் பெற்றவர் அமரர் சாரங்கபாணி ஐயா அவர்கள். "நான் ஆசிரியர், நீ மாணவன், எனக்குக் கட்டுப்பட்டன், அவன் அடங்கி நடத்தல் வேண்டும்" என்ற ஆசிரியர் யுகம் நிலவிய காலத்தில் "இவர்கள் எனது பிள்ளைகள்" எனக் கருதியதுடன் அன்பும் ஆதரவும் காட்டி, தனது இரு கரங்களாலும் எம்மை அரவணைத்து அமைதியாகவும் பரபரப்பில்லாமலும் நிதானமாகவும் கற்பித்து ஆசிரியர் - மாணவர் உறவில் ஒரு சீர்திருத்தவாரியாகச் செயற்பட்டவர்தான் சாரங்கபாணி சேர் அவர்கள்.

ஆடி அசையும் திடமான நடையும் கணீரென்ற குரலும் புன்முறுவல் கலந்த பார்வையும் எளிமையான தோற்றமும் அவருக்குத் தனித்துவத்தைத் தந்தது.

க.பொ.த உயர்தரத்தில் தமிழ் இலக்கணமும் தமிழ் இலக்கியமும் தெளிவாகக் கற்பிப்பதில் அவருக்கு நிகராக யாரும் இருக்கவில்லை. அக்காலத்தில் வைத்தியராகவும் பொறியியலாளராகவும் வருவதற்கு ஆசைப்பட்ட மாணவர்கள் வகுப்பறையில் நிறைந்திருக்க பத்துக்கும் குறைவான நாங்கள் கலைத்துறையில் பயின்றோம். இவ்வேளையிலே தமிழ்ப் பாடம் உட்பட அனைத்துப் பாடங்களிலும் சிறந்த பெறுபேற்றைப் பெற்று 1978/79 கல்வியாண்டில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானோம். நானும் அமரர் சாரங்கபாணி சேர் கற்பித்த தமிழ்ப் பாடத்தில் உயர்பெறுபேற்றைப் பெற்று திறமை அடிப்படையில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான போது என்னை ஆரத்த தழுவிக் கட்டியணைத்து அளவிலா ஆனந்தமடைந்தார்.

சாரங்கபாணி சேர் மிகுந்த பொருளாதாரக் கஷ்டத்தில் வாழ்ந்தாலும் நாடி வந்த மாணவர்களுக்கு கல்வித் தானம் செய்வதில் என்றுமே தயக்கம் காட்டியதில்லை. தனது சிறுபிள்ளைகளைப் பராமரிக்க வேண்டிய நேரத்தைக்கூட எமக்காகச் செலவழித்து, தனது இல்லத்துக்குக்கூட எம்மை அழைத்து பல தடவை பரீட்சைக் காலங்களிலே மேலதிக வகுப்புக்களை நடத்தி எம்மை உபசரித்து உற்சாகப்படுத்தியதை என்னால் என்றுமே மறக்கமுடியாது "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்" என்பதற்கேற்ப எமது உள்ளங் கவர்ந்த ஆசிரியராகிய சாரங்கபாணி ஐயா அவர்களின் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் கல்விகேள்விகளிலும் தொழில்துறைகளிலும் உயரந்த நிலையை அடைந்து .வளமுடன் வாழ்கிறார்கள் என்பது மகழ்ச்சி நிறைந்ததாகும். இன்று சாரங்கபாணி சேர் போன்ற நல்லாசான்களைக் காண்பதரிது. "இருந்தாலும் மறைந்தாலும் பெயர் சொல்ல வேண்டும். இவர் போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்" என்ற கூற்று அமரர் சாரங்கபாணி சேருக்கு மிகவும் பொருத்தமானதே.

**ஏ.எஸ்.யோகராஜா,**
ஓய்வுநிலை அதிபர்,
மட்/ அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை,
மட்டக்களப்பு.



## சாரங்கபாணி எனும் சர்க்கரைப்பாகு

மட்டக்ளப்பு நகர் பெற்றெடுத்த முத்து சாரங்கபாணி சேர். எனக்கும் அவருக்கும் மெதடிஸ்த மத்திய கல்லூரியிலிருந்தே ஆசிரிய மாணவ தொடர்பு. அவர் எனக்கு ஆறாம், ஏழாம் வகுப்புகளில் சமயமும் தமிழும் கற்பித்தவர். அப்பொழுதே எனக்குப் பகுத்தறிவுச் சிந்தனைகளை விதைத்தவர், அவர் என்றே கூறவேண்டும். ஏனெனில் கற்பிக்கின்ற பொழுதே பாடக்கருத்துக்களோடு பகுத்தறிவுச்சிந்தனைக் கருத்துக்களைப் புகுத்தி எங்களைச் சிந்திக்கவைத்து, கதைக்கத் தூண்டி, விவாதிக்க வைத்து, எங்களது நியாயங்களையும் கேட்டு, வாதிட்டு சிந்திக்கவைத்த பெருமகன்.

அவர் மீட்டுப்பார்க்க முடியாதவர், ஏனெனில் அவர் எங்களது ஆன்மாவோடு கலந்தவர். எதற்காக இதைக் கூறுகிறேன் என்றால் மத்திய கல்லூரியில் க.பொ.த. சாதரண நிலையிலிருந்து உயர் கல்வி கற்பதற்காக (க.பொ.த-உ.த.) தற்பொழுது மட்/இந்துக கல்லூரி, (அப்பொழுது மட்/கோட்டைமுனை ம.வி) அங்கேயும் எங்கள் உறவு தொடர்ந்தது.
அக்காலத்தில் பல விடயங்கள் ஊடாக எங்கள் வாழ்வோடு கலந்திருந்திருக்கிறார். அதில் ஒரு சில விடயங்களைக் கூறாமல் இருக்க முடியாது.

அப்படி ஒருநாள் - பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிக்காக ஆயத்தம் நடந்து கொண்டிருந்த வேளையில், பயிற்சி வழங்கிக் கொண்டிருந்த ஆசிரியர் எங்களது சக மாணவியுடன் சிறிய சில்மிசத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும், அவள் அழுது கொண்டே அவ்விடயத்தை என்னிடமும், எனது நண்பனிடமும் பகிர, நாங்களும் அவ்வேகத்தில் அவ்வாசிரியருடன் முரண்பட்டுக்கொண்டோம். ஆசிரியரும் உடனே அதிபராக இருந்த சாரங்கபாணி சேரிடம் முறையிட்டுவிட்டார். நாங்களும் பயந்து மைதானத்தில் அங்கொருவர், இங்கொருவராக நின்றோம். மைதானத்துள் புகுந்த சாரங்கபாணி சேர் கண்ணால் எங்களைத் தேடி, கண்ணாலே கூப்பிட்டார். பயந்து பயந்து போனோம் எங்கள் இருவரையும் இரண்டு கைகளாலும் அணைத்துப்பிடித்தவர் நடந்து போகும் போதே கூறினார். 'ரெண்டுபேரும் பின்னேரம் வீட்ட வாங்க' அவ்வளவுதான். எங்களை விட்டுவிட்டார். எங்களுக்கோ பயம் அதிகரித்ததே தவிர தீர்ந்தபாடில்லை.

இருவரும் அன்று பின்னேரம் பயந்து பயந்து வீட்டிற்குப் போனோம். வழக்கம்போல் வாசற்படியில் இருக்கிறார். எங்களைக் கண்டதும் எங்களை அழைத்து அவரது இருபக்கத்திலும் தனது கைகளுக்குள் அமர வைத்துக்கொண்டு நடந்ததை ஒவ்வொன்றாகக் கேட்டார். நாங்களும் ஒவ்வென்றாக எல்லாவற்றையும் கூறினோம். எல்லாற்றையும் கேட்டவர் ஒன்றும் பேசவில்லை 'சரி நீங்க போங்க' எங்களை அனுப்பவிட்டார். எங்களுக்கோ பயம் இன்னும் தீர்ந்தபாடில்லை.
அடுத்தநாள் வழமைபோல் பாடசாலைக்குச் சென்றோம். பயிற்சிக்காக எல்லோரும் மைதானத்திற்குச் சென்றோம். குறிப்பிட்ட மாணவி எங்களிடம் வந்து காலையில் சேர் ''நேற்று நடந்ததைக் கேட்டவர்'' என்று கூறினாள். பயிற்சி முடியும் வரைக்கும் குறிப்பிட்ட அவ்வாசிரியர் மைதானதிற்குள் வரவில்லை. நாங்கள் வகுப்பறைக்குள் சென்ற பின் அறிந்தோம், அவ்வாசிரியர் அன்றே இடமாற்றம் வழங்கப்பட்டு சென்றுவிட்டார் என்பதை. அந்த சாரங்கபாணி என்னும் ஆளுமையின் முடிவு அனைவர்க்கும் விடிவு. அதிபர்களுக்கு இவர் ஓர் அகராதி.

இன்னுமொரு விடயத்தை கூறவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அந்தக் காலத்தில் (1985 களுக்குப் பின்னர்) எனக்கு நன்கு தெரிந்த மாணவன் க.பொ.த. (உ.த) நகர்ப்புறப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் வேளையில் விடுதலை வேட்கையில் நாட்டம் கொண்டு அதனோடு இணைந்துகொண்டார். பெற்றோரோ கண்ணீரும் கம்பலையுமாக அலைந்து திரிந்து பிள்ளையை அழைத்து வந்துவிட்டார்கள், வசதியானவர்கள் தலைநகரிற்கு அனுப்பிவைத்தார்கள். இவர்களோ அந்தளவிற்கு வசதி படைத்தவர்கள் இல்லை. ஏற்கனவே கல்வி கற்ற பாடசாலைக்கு அனுப்பவும் விருப்பம் இல்லை. இவ்விடயத்தை மிகவும் வேதனையுடன் என்னிடம் பகிர்ந்து கொண்டார்கள். நான் அம்மாணவனின் தந்தையை அழைத்துக்கொண்டு சாரங்கபாணி சேரிடம் சென்றேன். மாணவனின் தந்தை சகலதையும் கூறினார். அவ்வளவற்றையும் கவனமாக கேட்டபின் சாரங்கபாணி சேர் கூறியது, தந்தையினுடைய பெயரை விளித்து "இனி அவன் உண்ட பிள்ள இல்ல, எண்ட பிள்ள, நாளைக்கு அவன தனிய பள்ளிக்கு அனுப்பு நீ வரவேணாம், நான் அவனப் பாக்கிறன்'' – அம்மாணவனை பெறியியல் பீடத்திற்கு அனுப்பியவர்.

இப்படிப்பட்டவரை நினைவுகூர்வதில் பெருமைப்படுகிறேன், இன்னும் இப்படிப்பட்டவர்களைத் தேடிக் கொண்டிருக்கிறேன், தேடுதல் தொடர்கிறது………..
என்றும் அழியா நினைவுகளுடன்

**சி.ஶ்ரீதரன்.** B.Sc. (Psychology & Psychotherapy)
உளவியல்சார் உளவளத்துணையாளர்,
மட்டக்களப்பு.

# கருத்தியல் உரையாடலை வேண்டி நிற்கும் குண்டுத் தாக்குதல்கள்



குண்டுத் தாக்குதலுக்குப் பின் பல தேசியப் பத்திரிகைகள், உள்ளூர் பத்திரிகையான அரங்கம், முகநூல் என எல்லாவகையான ஊடகங்களிலும் ஊடகவியலாளர்களும் பொதுமக்களும் குண்டுத் தாக்குதல் தொடர்பான தங்களுடைய பார்வைகளை முன்வைத்திருக்கிறார்கள். எனது அவதானத்தின் படி பாத்திமா மஜிதா, ஸர்மிளா ஸெய்யத் என்பவர்களுடைய விமர்சனபூர்வமான எழுத்தைத் தவிர இவ்வாறான குண்டு வெடிப்புக்களைத் தடுப்பதற்கான ஆக்கபூர்வமான எந்த ஒரு பதிவையும் முஸ்லிம், தமிழ் புலமையாளர்கள் முன்வைக்காதது ஏமாற்றமளிக்கின்றது.

பயங்கரவாதிகளையும் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் மத அடிப்படைவாதிகளையும் தேடிப் பிடித்து கைது செய்வதும் சிறையிலடைப்பதும் ஒரு தற்காலிகமான தீர்வே ஒழிய நிரந்தரமான தீர்வல்ல. ஏனெனில் காத்தான்குடியைச் சேர்ந்த சஹ்ரான் ஹாசிம் குரானுக்குள்ளிருந்தே தனக்கான வியாக்கியானங்களையும் பொருள்கோடல்களையும் எடுத்து விளக்கி, அதற்கான கருத்தியல்தளம் கொண்ட பள்ளிவாசல்களை சர்வதேச பயங்கரவாதிகளின் நிதியுதவிகளுடன் அமைத்து, அவற்றுக்கூடாக பயங்கரவாதிகளை உருவாக்கியுள்ளான். அவன் மற்றவர்களிடம் பணத்தைப் பெற்று, புறநிலையாக நின்றுகொண்டு மற்றவர்களை இயக்கும் கருவியாக அன்றி அகநிலைப்பட்டு தானும் தங்களது குடும்பங்களும் தந்தை, தாய், பிள்ளை, காதலன், காதலி, கணவன், மனைவி, சகோதரர் என்ற எந்த வேறுபாடுமின்றி எல்லோரும் சேர்ந்து இஸ்லாத்தின் புனிதக் கடமை ஒன்றினை செய்து முடிக்கின்ற உணர்வோடும் பக்தியோடும் நம்பிக்கையோடும் எந்த விதமான குற்ற உணர்வுமின்றி வெடித்துச் சிதறியுள்ளார்கள்.

தங்களுடைய குழந்தைகளின் மரணத்தைக் கொண்டாடியிருக்கிறார்கள். மற்ற குழந்தைகளினதும் அப்பாவிகளினதும் மரணத்தில் மகிழ்ந்திருக்கிறார்கள். இந்த நடத்தைக்குப் பின்னாலுள்ள உளவியலை நாம் ஆராய வேண்டும். அது தனிமனித உளவியலாக இருந்து குடும்ப உளவியலாகி சமூக உளவியலாக விருத்தியடைந்திருக்கிறது.

பயங்கரவாதிகளைப் பிடிப்பதென்பது இந்த உளவியலை வெற்றிகொள்வது என்பது அல்ல. இந்த உளவியலை வெற்றி கொள்வதற்கு எமக்கு ஒரு பலமான கருத்தியல் உரையாடல் பொதுவெளியில் முக்கியமாகின்றது.

இந்தக் கருத்தியல் உரையாடல் தளத்தினை உருவாக்குபவர்களாக பின்வரும் இரு பகுதியினரைக் குறிப்பிடலாம்.

1. முஸ்லிம் சமூகத்திலுள்ள சனநாயகவாதிகள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், புலமையாளர்கள் போன்றவர்கள்.

2. பல்கலைக் கழக சமூகத்தினர்

1. இந்த உரையாடலுக்கான தளத்தினை முதலில் முஸ்லிம் சனநாயகவாதிகள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், புலமையாளர்கள், போன்றவர்கள் உருவாக்க வேண்டும். ஆனால் அவர்கள் எவருமே இந்தவகையான உரையாடலுக்கு வருவதற்கும் அதற்கான அமைப்புக்களை உருவாக்கி வளர்ப்பதற்கும் தயக்கம் காட்டுகின்றார்கள். அவர்களின் தயக்கத்துக்குப் பின்னாலுள்ள அவர்களின் அச்சமே எம்மை அச்சமும் கவலையும் கொள்ள வைக்கின்றது. இவர்களின் இந்த மௌனம் இஸ்லாமிய அடிப்படைவாதத்தினை வளர்ப்பதற்கான அவர்களின் மௌன சம்மதமாகவும் கொள்ளவேண்டி இருக்கின்றது.

சில தமிழ் சனநாயகவாதிகள் 'முஸ்லிம்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தியபோது தமிழ் புலமையாளர்களும் கலைஞர்களும் சனநாயகவாதிகளும் மௌனமாகத்தான் இருந்தார்கள் ஆனால் முஸ்லீம்களின் பல அமைப்புக்கள் இந்தப் பயங்கரவாதிகளைக் கண்டித்து தமிழ், சிங்கள மக்களுக்கு நம்பிக்கையளித்துள்ளார்கள் இந்த நேரத்தில் அவர்களை தனித்து விடாது நாம் பக்கதுணையாக, ஆறுதலாக இருக்கவேண்டும் என்றும் அவர்களுடன் சேர்ந்து நோன்பு திறந்து கஞ்சிகுடித்து உறவைக் கட்டியெழுப்புவதன் ஊடாக இஸ்லாமிய அடிப்படைவாதத்தினை இல்லாமலாக்கிவிடலாம்' என்ற கருத்துப்படக் கூறுகிறார்கள். அவர்களின் இந்த மனிதாபிமானச் செயற்பாட்டை பாராட்டலாம். எமக்கு முஸ்லிம்கள் எதிரிகள் கிடையாது என்பதில் பெரும்பான்மையானவர்கள் மிகத் தெளிவாக இருக்கின்றார்கள். இங்கு எந்த இனக்கலவரமும் ஏற்படாதது இதன் அடையாளமாகும். ஆனால் இன்றைய முஸ்லிம் சமூகத்தின் நெருக்கடி

**எழுவான் வேலன்**

நிலையினையும் அன்றைய தமிழ் சமூகத்தின் நெருக்கடி நிலையினையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பிக் கொள்ளக்கூடாது. புலிகள் தங்களுக்கான ஆட்சிப் பரப்பைக் கொண்டிருந்ததோடு அவர்களின் ஆட்சிப்பரப்புக்கு வெளியிலும் தங்களுடைய செயற்பாடுகளை செய்து முடிக்கும் வல்லமையைக் கொண்டிருந்தார்கள். இதன் காரணத்தினால் புலிகளின் ஆட்சிப்பரப்புக்குள் இருந்த தமிழ் மக்களுக்கு மூன்று தெரிவுகளே இருந்தன.

1. புலிகளை ஏற்றுக் கொண்டு அவர்களின் விசுவாசிகளாக செயற்படுதல்

2. எல்லா துன்ப துயரங்களையும் சகித்துக் கொண்டு அவர்களுக்கு எதிராக எதுவும் பேசாமல் மௌனம் காத்தல்

3. இராணுவப் பாதுகாப்பில் இருந்து கொண்டு அவர்களின் செயற்பாடுகளை விமர்சித்தல் அல்லது உயிருக்குப் பயமற்று விமர்சித்து அவர்களின் மரண தண்டனைக்கு உள்ளாதல்.

மேற்படி சூழல் சஹ்ரானுடைய விடயத்தில் இல்லை. முஸ்லிம் சனநாயகவாதிகளுக்கு இருக்கின்ற அச்சம் நிறுவனமயப்பட்டு அடிப்படைவாதமாக வளர்ந்து கொண்டிருக்கும் இஸ்லாத்தை கேள்வி கேட்க முடியுமா என்பதுதான். தாங்கள் எழுப்புகின்ற கேள்விகளால் தாங்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டு விடுவோமா என்பதுமாகும்.

இவ்விடயத்தில்தான் தமிழ் புலமையாளர்கள், சனநாயகவாதிகள் உங்களை நாங்கள் தனித்து விட மாட்டோம் உங்களோடு தோளோடு தோள் நிற்கின்றோம். எனும் நம்பிக்கையினை ஏற்படுத்துவது முக்கியமாகின்றது.

இன்றைய சூழ்நிலையில் இவ்வாறு நான் குறிப்பிடுவதை இஸ்லாத்துக்கு எதிரான ஒன்று என்று கூட சிலர் நினைக்கலாம். எனது புரிதலில் உண்மையான ஒற்றை இஸ்லாம் என ஒன்றில்லை. காத்தான்குடி எனும் ஒரு ஊருக்குள்ளே நான்கு வகையான இஸ்லாத்தைக் காணலாம். அதாவது றவூப் மௌலவிக்கு ஒரு வகையான இஸ்லாமும் பயில்வான் என்பவருக்கு ஒருவகையான இஸ்லாமும் சஹ்ரானுக்கு ஒருவகையான இஸ்லாமும் ஜம்மியதுல்லா உலமா சபையினருக்கு ஒரு வகையான இஸ்லாமுமேயாகும். இவ்வாறே இஸ்லாமிய உலகம் இஸ்லாமின் பல்வேறு வகைப்பாடுகளைக் கொண்ட ஒன்றாகவே இருக்கின்றது. இந்த நிலையில் இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் சூழலுக்கேற்ற 'இலங்கையில் இஸ்லாம்' என்பது பற்றி நாம் உரையாட வேண்டும். பன்மைத் தன்மை கொண்ட எமது நாட்டில் எந்த மதமாயினும் சரி இனமாயினும் சரி தங்களுடையதை மாத்திரம் புனிதத்தன்மை கொண்ட ஒன்றாக வலியுறுத்தி அடையாளங்களைக் கட்டியெழுப்பவார்களாக இருந்தால் அது அந்தப் பன்மைத் தன்மைக்கான ஆபத்தாகவே முடியும். இந்த வகையான ஆபத்துக்களை மிக உயர்ந்த சனநாயகத் தன்மையுடனும் நேர்மையுடனும் எதிர்ப்பதற்கும் விமர்சிப்பதற்கும் எவரும் தயக்கம் காட்டுதல் கூடாது. இதனை இந்த முஸ்லிம் புலமையாளர்கள், சனநாயகவாதிகள் செய்வதற்கு முன்வருதல் வேண்டும். இதுவே அவர்கள் தங்கள் குற்ற உணர்ச்சியிலிருந்து விடுபடுவதற்கும் மனிதத்துவத்தினை மதிக்கின்ற மகிழ்ச்சியான ஒரு நாட்டினை கட்டியெழுப்புவதற்கும் வழியாகும்.

## கிழக்கின் பல்கலைக்கழகங்கள் சாதித்தது என்ன?

2. பல்கலைக் கழக சமூகத்தினர்:

அடுத்து இந்த உரையாடல் தளத்தினை உருவாக்க வேண்டியவர்களாக பல்கலைக் கழக சமூகத்தினரைக் குறிப்பிடலாம். கிழக்கில் தமிழ், முஸ்லிம் சமூகங்களின் அறிவு விருத்தியின் மையங்களாக கிழக்குப் பல்கலைக் கழகம், தென்கிழுக்குப் பல்கலைக் கழகம் எனும் இரு பல்கலைக்கழகங்களும் திருகோணமலையில் ஒரு வளாகமும் கல்லடியில் சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகமும் இருக்கின்றன.

பல்கலைக் கழகம் என்பது சந்தைக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலை அல்ல. அது சமூகத்துக்குத் தேவையான அறிவும் ஆற்றலும் ஒழுக்கமும் நல்ல சமூக விழுமியங்களும் கொண்ட மனிதர்களை உருவாக்குகின்ற பெரும் அறிவுக் கூடமாகும்.

கிழக்குப் பல்கலைக் கழகம், இஸ்லாமியத் துறை, ஒப்பீட்டுச் சமயத் துறை, சமூகவிஞ்ஞானத்துறை, தத்துவத்துறை, நுண்கலைத்துறை, வரலாற்றுத் துறை எனும் மனிதக் கற்கை நெறிகளைக் கொண்டிருக்கிறது. இப் பல்கலைக் கழகங்களினாலும் அவற்றின் மேற்படி துறைகளினாலும் இடம்பெற்ற அறிவுருவாக்கம் அறிவுப்பரப்புகை என்ன எனும் கேள்வி இந்தக் குண்டு வெடிப்பினைத் தொடர்ந்து எழுகின்றது. ஏனெனில் சஹ்ரான் எந்தப் பல்கலைக் கழகத்திலும் பட்டம் பெறாமல் ஒரு அழிவு வேலைக்காக எத்தனை தற்கொலைதாரிகளையும் பள்ளிவாசல்களையும் உருவாக்கியிருக்கின்றான் என்றால் எமது பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்றுச் செல்லும் பட்டதாரிகளும் சரி விரிவுரையாளர்களும் சரி சஹ்ரானின் கருத்தியலுக்கு எதிரான ஆக்கபூர்வமான இலங்கையின் பல்லினத் தன்மைக்குத் தேவையான ஒரு கருத்தியல் தளத்தினை உருவாக்க முடியாமல்த்தான் இருந்திருக்கின்றார்கள்.

'உயர்வான சமூக லட்சியங்களின் பாலான நாட்டம், சிந்தாந்த உறுதிப்பாடு, உழைப்பின் மேலான உண்மையான படைப்பாற்றல் உறவு ஆகியவற்றை மனிதனிடம் பயிற்றுவிப்பது என்பது மிக முக்கிய கடமைகளில் ஒன்றாகும்' என லி.இ.பிரேஷ்னெவ் குறிப்பிடுகின்றார். இவ்வாறு சமூகநல நாட்டமும் மானுட நேசிப்பும் கொண்ட மனிதர்களை இந்தப் பல்கலைக் கழகங்களினால் உருவாக்க முடியாமைக்குக் காரணம் அவர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையின் வறுமைத்தன்மை எனக் கூறவேண்டியிருக்கின்றது.

குண்டு வெடிப்புக்குப் பின்னராவது இந்தப் புலமையாளர்கள் ஒரு ஆழமான உரையாடலை ஆரம்பிப்பார்களா என்றால் இதுவரைக்கும் அதுவும் நடைபெறவில்லை. குண்டு வெடிப்பின் சூத்திரதாரியும் இஸ்லாத்தின் அடிப்படைவாதத்தினை வளர்த்தெடுத்தவனும் இருந்த இப் பிரதேசத்தில் இருக்கின்ற இந்த இரு பல்கலைக்கழகத்தின் புலமையாளர்கள் என்று சொல்லப்படுபவர்கள் இந்தச் சமூகத்துக்கு அல்லது இந்த நாட்டுக்கு எந்தவிதமான அறிவியல் ரீதியான பங்களிப்பையும் வழங்காது ஒரு சாதாரண பாமரன் போன்று ஒரு பார்வையாளனாக இருப்பதில் இந்தச் சமூகத்துக்கு எவ்வித பயனும் இல்லை.

ஆனால் அரசு வருடாந்த ஆய்வுக் கொடுப்பனவு, வருடாந்த ஆய்வு மகாநாடுகள் என இலட்சக்கணக்கான பணத்தினை வழங்கிக்கொண்டுதான் இருக்கின்றது. ஆனால் இவற்றினால் சமூகம் எந்தவிதமான நல்ல அறுவடைகளையும் செய்வது கிடையாது. எவ்வாறு அரசியல் தனிப்பட்டவர்களின் சுகபோகத்துக்கான ஒன்றாக இருக்கிறதோ அதேபோன்றுதான் பல்கலைக் கழகங்களும் சில தனிப்பட்டவர்களின் சுகபோகத்துக்கான ஒன்றாக மாறிவருகின்றதோ என எண்ணத் தோன்றுகின்றது.

எனவே இந்தப் பல்கலைக் கழகங்களும் முஸ்லிம் சனநாயகவாதிகளும் எமது இளைஞர்களுக்கு சரியான அறிவினையும் சமூகப் பொறுப்பினையும் ஊட்டுவதன் மூலம் எமது இளைஞர்கள் எவனோ ஒரு முகம் தெரியாதவனுடைய கருவியாகப் பயன்படுவதைத் தடுப்பதுடன் மதம், இனம், சாதி, பிரதேசம் என்ற அடிப்படையில் எந்த ஒரு மனிதனது உயிரையும் உடமையினையும் உரிமையினையும் பறிக்காதிருக்கின்ற சமூகத்தை உருவாக்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு முன்வர வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

NELSON COLLEGE LONDON

# Now Enrolling

NCL
NELSON COLLEGE LONDON

Are you 18+
CALL US

Business Course:
0208 514 0033

Hospitality Management:
0203 500 0239



## Why Us

We provide:

- One to One support
- Flexible Timetable
- National and international course-based events & tours
- Employer introduction
- Job placement

## Courses

- HND Business
- HND Hospitality Management
- BA (Hons) Top Up in Business
- BA (Hons) Top Up in Hospitality Management

---

அரங்கம்
செய்திகள்

**அரங்கம் பத்திரிகையில் விளம்பரம் செய்ய சிறப்புத் தள்ளுபடி!**

**கால்பக்கம் - ரூபா 2500**
**அரைப்பக்கம் - ரூபா 5000**
**முழுப்பக்கம் - ரூபா 10,000**
**சிறுவிளம்பரங்கள் - ரூபா 200 மாத்திரமே**






# செயற்பாட்டை பரவாலாக்கல் செய்யும் ஐஎஸ்

தான் நேரடியாக இயக்கும் நாடுகளில் அண்மையில் கண்ட தொடர் தோல்விகள் காரணமாக தமது யுக்திகளை மாற்றிவரும் ஐஎஸ் அமைப்பு அதற்கான தனது அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளை பரவலாக்கம் செய்து வருகின்றது. இதனால் அனைத்து உலகமும் எதிர்கொள்ளக்கூடிய ஆபத்துக்கள் அதிகரித்துள்ளதாக தீவிரவாத இயக்கங்கள் குறித்த ஆய்வாளரான டாக்டர் றொகான் குணரட்ண தெரிவித்துள்ளார்.

ஐஎஸ்ஸின் தலைமைப்பீடமும் அதனை இயக்கும் தலைமைகளும் தற்போது தலைமறைவாகியுள்ளதுடன், தமது இருப்பிடங்களையும் மாற்றி வருகின்றனர்.






உலக மட்டத்தில் இருக்கும் பலவிதமான பலவீனங்கள் காரணமாக ஐஎஸ் மற்றும் அல்கைதாவின் அச்சுறுத்தல் இன்னமும் பலமாகவே இருந்து வருகின்றது.

ஆனால், ஐஎஸ்ஸின் உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை சிரியா மற்றும் இராக்கில் அந்த அமைப்பின் நேரடித் தாக்குதல் போராளிகளின் எண்ணிக்கை அறுபதினாயிரத்தில் இருந்து ஐயாயிரம், ஆறாயிரமாகக் குறைந்து விட்டது. அதன் கைவசமிருந்த நிலத்தின் அளவும் 1 வீதமாகக் குறைந்துவிட்டது.

ஆனால், அவர்களால் அறிவிக்கப்பட்ட இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்துக்கு (கலிபேட்) வெளியே அந்த அமைப்பு தனது குழுக்கள், மறைவிடங்கள், மற்றும் அந்த அமைப்பின் தலைவர் அபூபக்கர் அல்பக்தாதிக்கு விசுவாசமான ஆட்கள் ஆகியோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அதேவேளை வெளிநாட்டுப் போராளிகள் தமது நாடுகளுக்கு திரும்பும் போது அந்த நாடுகளிலும் ஐஎஸ் அவர்கள் மூலம் அச்சுறுத்தல்களை அதிகரித்து வருகின்றது.



தற்போது 102 நாடுகளில் இஸ்லாமிய அரசு தீவிரவாதிகள் நாற்பதினாயிரம் வரை இருப்பதாக அரசாங்கங்கள் மதிப்பிட்டுள்ளன.

இடம்பெயர்ந்த போராளிகள் வட அமெரிக்கா, ஐரோப்பா, மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளையும் தாக்கும் வல்லமை கொண்டுள்ளதாக றொகான் குணரட்ண கூறுகிறார்.

இப்படியாக பல நாடுகளிலும் தனது தாக்குதலாளிகளை அந்த அமைப்பு கொண்டுள்ளதாக அஞ்சப்படுகின்றது.

குறிப்பாக ஆப்கானிஸ்தானில் கடந்த 2017 முதல் பலமாக கால்பதித்துள்ள ஐஎஸ் அந்த ஊரை தனது புதிய மையமாகக் கொண்டு செயற்பட ஆரம்பித்துள்ளது.

துரோகிகளை ஒழித்தல், உளவுத்துறை மூலம் புதிய இடங்களில் புதிய ஆட்களைச் சேர்த்தல், ரகசிய மற்றும் மறைமுக வலையமைப்புக்களை உருவாக்கல், நகரங்களுக்குள் தாக்குதல் ஈடுபடல் அதன் பின்னர் மாபெரும் போருக்கு வழி செய்தல் ஆகியன இவற்றுள் அடங்கும். இதன் மூலம் தாம் எதிர்கொண்ட நேரடி இழப்புக்களை சரி செய்வதே அதன் திட்டம்.



தமக்கு எதிராக போரிடும் கூட்டுப்படையின் அழுத்தத்தை குறைக்க அந்தந்த நாடுகளில் தாக்குதல் நடத்தும் யுத்தியையும் அது கடைப்பிடிக்கவுள்ளது.

ஐஎஸ் மீது அனைவரது கவனமும் குவிந்திருக்கின்ற போதிலும் அல்கைதாவினாலும் அதன் இணை அமைப்புக்களாலும் ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல் குறைந்துவிட்டதாகக் கூறமுடியாது.

இவற்றை ஒடுக்க நேரடியான, பாரிய தாக்குதல்களும் தேடுதல்களும் அவசியந்தான் என்றாலும் இவை உடனடியாகக் குறுகிய காலத்துக்கே பலன் தரும் என்று இராணுவ ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

நீடித்த பலனைப்பெற கடும்போக்கை நாடும் இளைஞர்கள் விரக்தியடையும் நிலையை தடுப்பதும், சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளில் இருந்து அவர்களை மீட்பதுமே உதவும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

# இப்படியும் ஒரு காலம் நிலவியது

## மம்மது கடையும், கச்சிக்காக்காவும்

***(நல்லிணக்கத்தை நோக்கிய நகர்வுகளில் ஒன்று எமது அடுத்த தலைமுறைக்கு எம்மினங்களின் உறவின் பாரம்பரியத்தை, மரபைக் கூறுவது. எம்மூத்தவர்கள் செய்ய வேண்டியது அது. அதனைச் செய்ய அரங்கமும் விளைகிறது. பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் இங்கு எமது அடுத்த தலைமுறையுடன் பேசுகிறார். -- ஆசிரியர்)***

*(எல்லா இனத்துப் பேரப் பிள்ளைகளுக்கும் ஒரு பாட்டன் சொல்லும் பழம் கதைகள்) கதை—1*

இப்போது எனக்கு 76 வயது 1949 ஆம் ஆண்டு அப்போது எனக்கு ஆறு வயதிருக்கும்' இது ஏறத்தாள 70 வருடங்களுக்கு முந்திய கதை இன்றைய தலைமுறை கருவில் இருக்காத காலம் அமிர்தகளி கிராமத்தில் காத்தான்குடி முகம்மது ஓர் பெரிய சில்லறைக் கடை வைத்திருந்தார்,

அங்கு இருந்த ஒரே ஒரு சில்லறைக்கடை அது. முகம்மது கடை என்றே அது அழைக்கப்பட்டது . முகம்மது மம்தானார். மட்டக்களப்பு நகரிலும் கிராமப் புறங்களிலும் அக்காலத்தில் முஸ்லிம்கள் பல கடைகள் வைத்திருந்தனர்.

பெரும்பாலோர் காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள். சாவலுடைய தேநீர்க் கடை மட்டக்களப்பில் பிரசித்தம். மட்டக்களப்பு தமிழ் மக்கள் நாவில் சாஹுல் சாவலானார். ஈசிப் பாசியாருடைய பலசரக்குக் கடை இன்னும் பிரசித்தம். மட்டக்களப்பு தமிழ் மக்கள் நாவில் யூசுப் ஹாஜியார் ஈசிப்பாசியாரானார். தமிழர்கள் இஸ்லாமியப் பெயர்களைத் தமதாக்கிகொண்ட முறைமை அது. சாஹுலும் யூசுப் ஹாஜியாரும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

இவ்வண்ணமே காத்தான்குடியிலும் பல தமிழ்ப் பெயர்கள் சிற்சில வேறு பாடுகளுடன் இஸ்லாமியரால் உச்சரிக்கப்பட்டன.

தமிழர்களும் அதனைப் பொருட்படுத்த வில்லை.

பெயர்கள் அங்கு முக்கியமல்ல. மனித உறவே அங்கு நிலவியது. நான் கூற வருவது எனது சிறு வயதில் எனக்கு அறிமுகமான எங்களூர் மம்மதுக் காக்கா கடை பற்றி. சகல சாமான்களும் அங்கிருந்தன, அத்தியாசிய சாமான்களான அரிசி, பருப்பு, மாசி, வெங்காயம் என்பவற்றுடன் எமக்குப் பிடித்தமான பலவகை மிட்டாய்கள் வர்ண வர்ண நிறங்களில் அங்கு இருந்தன மிட்டாயை நாங்கள் முட்டாசி என்று அன்று கூறினோம்.

அம்மா என்னைச் சாமான் வாங்க என் மாமாவுடன் அக்கடைக்கு அனுப்புவாள். எனக்கோ அந்த வர்ண வர்ண முட்டாசிகளில்தான் கண்.

மிக நீளமான சாடிகளில் நிரப்பப்பட்டு வரிசையாக அவை வைக்கப்பட்டு இருக்கும்.

அதிலும் எனக்குப் பிடித்த பல்லி மிட்டாய் ஒரு சாடியில் அங்கு இருந்தது.

மாமாவுடன் போகும் எனக்கு மிட்டாயும் கிடைக்கும். சில வேளைகளில் தந்தையுடனும் அக்கடைக்குச் செல்வேன் அக்கடை எங்கள் வீட்டிலிருந்து ஒரு மைலிலுக்கு அப்பால் இருந்தது.

சைக்கிள் வசதிகள் கூட இல்லாத காலம் அது. எல்லாம் நடைப் பயணம்தான். முகம்மதுவுக்கும் என் தந்தையாருக்கும் மதிப்பார்ந்த ஓர் உறவு இருந்தது.

கடை உரிமையாளர் முகம்மது சாரன் அணிந்து மேலே ஒரு முழுக்கை பெனியன் போட்டிருப்பார் . இடுப்பில் ஒரு அகலமான பெல்ட் அணிந்திருந்ததாக ஞாபகம். ஆஜானுபாகுவான தோற்றம் சற்று வயதுபோன தோற்றம். இப்போது நினைத்துப் பார்க்கையில் அவர் தோற்றத்திற்கும் அந்த ஊரின் சாதாரண மனிதர்களின் தோற்றத்திற்கும் வித்தியாசங்கள் எதுவும் தெரியவில்லை. அவ்வூர் மக்களைப் போலவே அவரும் உடை, தோற்றத்தில் இருந்தார்.

மக்களோடு ஒருவராக அவர் வாழ்ந்தார். அப்பாவோடு நான் கடை சென்று திரும்புகையில் 'தேவதாஸ்' ( அப்போது எனக்கு அதுதான் பெயர் இடைநிலைக் கல்வி பயில ஆரம்பித்தபோதுதான் எனது பிறப்பு அத்தாட்சிப் பெயரான மௌனகுரு வழக்கிற்கு வந்தது) எனக் கூப்பிட்டு பல்லிமுட்டாசிச் சாடிக்குள் கைவிட்டு தனது வலது கை நிறைய பல்லி முட்டாசு அள்ளித் தருவார். அவர் சிரிப்பு அழகாக இருக்கும். அப்போது அவர் முகம் எனக்கு மிக பிரகாசமாகத் தெரியும். அவருக்கு உதவியாளர்களாக இருவர் இருந்தனர்.

இருவரும் அவருடன் காத்தான்குடியிலிருந்து வந்தவர்கள்.உள்ளூரவர்களுக்கு கடலில், ஆற்றில் வருமானம் தரும் நல்ல தொழில் இருந்து. அதனால் அவர்கள் அங்கு வேலையாட்களாகச் செல்லவில்லை. ஊரிலே முகம்மதுவுக்கும் நல்ல மரியாதை இருந்தது, அக்கடைக்கும் நல்ல பேர் இருந்தது. காக்காட கடை என்றே அது அன்று அறியப்பட்டிருந்தது. காக்கா என்ற சொல் அண்ணன் என்ற பொருளிலேயே அன்று அர்த்தப்படுத்தப்பட்டது.

அவ்வூரில் ஒரு மாதாகோவிலும் ஒரு பிள்ளையார் கோவிலும் ஒரு மாரி அம்மன் கோவிலும் இருந்தன.


அக்கோவில் உற்சவங்களுக்கும் அவ்வூரில் நடைபெறும் விழாக்களுக்கும் அவரும் பண உதவி புரிவார். ஊரொடு ஒட்ட வாழ்ந்தார்.

அப்போது இஸ்லாம் பற்றியோ இஸ்லாமியர் பற்றியோ எதுவுமே எனக்குத் தெரியாது. ஆனால் என் தந்தையாருக்குச் சில இஸ்லாமிய நண்பர்கள் இருந்தனர். இஸ்லாம் பற்றியும் முகம்மது நபி பற்றியும் அல்லாஹ் பற்றியும் நான் அறிந்தது என் தந்தை மூலம்தான். இஸ்லாத்திலும் முகம்மது நபியிலும் எனது தந்தை மதிப்பு வைத்திருந்தார். அவருக்கு புத்தர் மீதும் சித்தர்கள் மீதும் மிகுந்த மதிப்பு இருந்தது. என் தந்தையார் ஓர் இந்துவாயினும் அவர் அடிக்கடி உதிர்க்கும் வார்த்தைகள்

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'

என் அம்மா கோட்டைமுனையைச் சேர்ந்தவர். கோட்டைமுனை மட்டக்களப்பு நகரின் மத்தியில் உள்ள ஓர் இடம்.

கோட்டைமுனையில் தமிழர்கள் , இஸ்லாமியர்கள், சிங்களவர்கள் என மூவினத்தவரும் வாழ்ந்தனர். இவர்களை விட பறங்கி இனத்தவரும் வாழ்ந்தனர். கோட்டைமுனையின் ஒரு பகுதி மோர்சாப்பிட்டி என்றும் அழைக்கப்பட்டது. மங்களராமயா எனும் புத்த விகாரை அங்கிருந்தது. அது சிங்கள மக்களுக்குரியது என அடையாளப்படுத்தப்பட்டாலும் தமிழ் மக்களும் அங்கு சென்று வணங்கினர்.




ஆண்டுதோறும் வைகாசி மாதம் நடைபெறும் விசாக் பௌர்ணமிக் கொண்டாட்டங்களை அருகிலிருந்த இஸ்லாமியரும் கிறிஸ்தவர்களும் அனுபவித்தனர் பறங்கி இன மக்களும் குடும்பம் குடும்பமாகச் சென்று இவ் விழாவினை அனுபவித்தனர்.

நாரத்தங்காய் ,கரும்பு வியாபாரங்களில் இஸ்லாமியரே அதிகம் ஈடுபட்டனர் வைகாசி வெசாக் நாள் அன்று மட்டக்களப்பில் அனைத்து இன பங்குகொள்ளும் களிக்கும் நாள். தமிழ் மக்களின் வீட்டுக்கு முன்னால் கூட வெசாக் கூடுகள் தொங்கும். மலர்களைத் தட்டுகளில் எடுத்துச் சென்று அமைதியாக வீற்றிருக்கும் புத்தரின் பாதங்களில் வைத்து அனைவரும் பேதமின்றி வணங்கினர். சைவ மக்களின் அரசடிப் பிள்ளையார் கோவில் ஒன்று அங்கிருந்தது. மோர்சாப்பிட்டியில் இஸ்லாமியச் சூழலில் அவுலியப்பா சமாதியும் மட்டக்களப்பு வாவிக் கரையில் இருந்தன.

ஒலியுல்லாஹ் என்ற பதமே அவுலியா என அழைக்கப்பட்டது. அவுலியா அப்பா சமாதி இஸ்லாமியரின் வணக்கத் தலமாகக் கருதப்பட் டது. இஸ்லாமியருக்கான பெரிய மசூதி மட்டக்களப்பின் முற்றவெளிக்கு அருகில் இருந்தது. அவுலியாப்பா சமாதி கோட்டைமுனையில் இருந்தது.

ஆனால் இரண்டும் ஒரு நிர்வாகத்தின் கீழ் இருக்கவில்லை. இந்துக்களும் அவுலியாப்பா சமாதி சென்று வணங்கினர். அங்கு வழங்கப்படும் நெய்ச்சோறு வெகு பிரசித்தமானது. நாதிர்சா என அது அழைகப்படும். கமகமக்கும் நெய் அதன் விசேடதன்மை. ஒவ்வொரு வருடமும் முஹர்ராம் மாதம் பிறை 1 இல் இருந்து 10 வரை இங்கு கொடியேற்றம். திக்ர், கந்தூரி என்பன இடம்பெறுகின்றன. அதனைத் தமிழ்-முஸ்லீம் மக்கள் இணைந்தே மேற்கொண்டனர், கொள்கின்றனர்.

இப்பகுதியில் நிறைய முஸ்லிம்கள் வாழ்ந்தனர். அவர்களும் அங்கிருந்த தமிழர்களும் மிக அந்நியோன்னியமாகப் பழகினர். திருமண உறவு ஒன்றுதான் அவர்களிடம் இல்லை. மற்றப்படி இரத்த உறவினர்கள் போலவே வாழ்ந்தனர்.

நல்ல கறிகள் சமைத்தால் ஒருவருக்கொருவர் பரிமாறியும் கொண்டனர். தமிழ் சிறுவர்களும் இஸ்லாமியச் சிறுவர்களும் ஒன்றாகச் சேர்ந்து விளையாடினர்.

இரு இனத்தவரும் அப்பிள்ளைகளைத் தமது பிள்ளைகள் போல கவனித்தனர் உணவளித்தனர். ஒருவர் கொண்டாட்டங்களில் மற்றவர் கலந்து கொண்டனர்

எனது அம்மாவுக்கு அங்கு சில முஸ்லீம் விளையாட்டுத் தோழிகளும் இருந்தனர். திருமணமாகி சீலாமுனைக்கு வந்தபின் அந்த உறவுகள் மெல்ல மெல்ல விட்டுப்போயின என்பார் அம்மா.

அவுலியப்பா மீது அம்மாவுக்கு அளவு கடந்த பக்தி. அவரிடம் சொன்னால் எல்லாம் நடக்கும் என்பார் அம்மா. எங்களுக்கு ஏதும் வருத்தம் வந்தால் அம்மா மூன்று இடங்களில் நேர்த்தி வைப்பார்.

ஒன்று மாரி அம்மன் , மற்றது அந்தோனியார். அடுத்தவர் அவுலியாப்பா அம்மாவுக்கு அனைவரும் ஒன்றே. பாடசாலை சென்று கல்வி கற்காத. படித்திராத என் அம்மா. என் அப்பா சொன்ன ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற வார்த்தைக்கு நடைமுறை உதாரணமாக வாழ்ந்தார். மோர்சாப்பிட்டியில்தான் ஓவியர் அஸீஸ் மாஸ்டர் இருந்தார். எழுத்தாளர் சா பித்தன் இருந்தார். கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர உருப்பினரான தங்கப்பல் ஆதம் பாவா இருந்தார். இவர்கள் பின்னால் எனக்கு அறிமுகமானவர்கள் அம்மாவுக்கு மிகப்பிரியமான கச்சிக் காக்காவும் அங்கு இருந்தார். அம்மா கோட்டைமுனை விட்டு சீலாமுனை வந்த பின்னும் எமது குடும்பத்தோடு உறவு வைத்திருந்தவர் இக் கச்சிக்காக்காதான். வீட்டில் அவரைக் கச்சி என்றுதான் அழைப்பார்கள். காக்காவை விட்டு விடுவார்கள்.அவர் சகலகலா வல்லவர் ஆடுவார் பாடுவார். அன்று சொக்கலால் பீடிக்கொம்பனி பீடி விளம்பரங்களில் பெண் வேடமிட்டு ஆடிப்பாடிவிட்டு வந்து, அவ்வனுபவங்களைக் கதை கதையாக விபரிப்பார் நாங்கள் வாய் பிழந்து கேட்டு நிற்போம். வீட்டில் கச்சிக் காக்கா எல்லாருக்கும் கச்சிக் காக்காதான்.

வீட்டில் சின்னச்சின்ன வேலைகள் செய்து கொடுப்பார். அடுப்படிக்குள் அம்மாவுடன் அமர்ந்து வெண்காயம் உரித்துக் கொடுப்பார்.

விறகு ஒடித்துக் கொடுப்பார். கடைக்குப் போய்ச் சாமான் வாங்கி வருவார். மத்தியானம் எங்களுடன் அமர்ந்து கதைத்துக் கொண்டே சாப்பிடுவார். மர நிழலில் பாயை விரித்து நித்திரைகொள்வார்.

அவர் தொப்பி அணிந்து கொண்டு வந்ததை நான் கண்டதாக ஞாபகம் இல்லை. எங்கள் வீட்டு முற்றத்தில் நின்று வணங்கியதைப் பார்த்துள்ளேன். அந்த வணக்கம் நாம் கும்பிடுவதை விட வித்தியாசமாக இருந்தது.

கச்சிக் தொழுகிறாண் என்று அம்மா கூறுவா. தொழுகை என்ற வார்த்தை இவ்வாறுதான் எனக்கு அறிமுகமானது அவரின் பெண்கள் போன்ற அங்க அசைவுகளினாலும் பேச்சினாலும் நடையினாலும் பாவனைகளினாலும் அவருக்கு பொண்டுகள் கச்சி என ஊரவர் பெயர் சூட்டியிருந்தனர்.

கச்சி என்பதன் அர்த்தம் எனக்குத் தெரியாத வயது, ஹஜ் தான் கச்சி ஆயிற்று என்பதை அறியும் வயதல்ல அது. எங்களூர்த் தமிழ் மக்களோடு தமிழராகவே அவர் வாழ்ந்தார்.

அவரை யாரும் முஸ்லீம் என அழைத்ததாக எனக்கு ஞாபகமில்லை.

அம்மாவுடன் அவுலியாப்பா சமாதிக்குச் செல்லுகையிலும் கோட்டைமுனை செல்லுகையிலும் தனது பழைய தோழியரை அம்மா சென்று சந்திப்பார்

அவர்கள் சேலை எடுத்து முக்காடு போட்டுக் கொண்டிருப்பார்கள் சில வேலைகளில் ஏனையோர் இயல்பாகவே இருப்பர். வித்தியாசங்கள் அதிகம் தெரிவதில்லை. அப்பா மூலம் அவர் பாணியில் அல்லாஹ்வையும் முகம்மது நபியையும் அறிந்தேன் என்றால் அம்மா மூலம் அவர் பாணியில் இஸ்லாத்தின் ஒருகிளைப் பிரிவான சூபிஸ மார்க்கஞானி அவுலியப்பாவையும் அறிந்தேன். இப்படி எங்கள் குடும்பத்திற்கும் எம்மூரவருக்கும் நெருக்கான இன்னொரு காக்கா இருந்தார். எமது குடும்பத்தோடு ஒட்டி உறவாடியவர் அவர். அவர்தான் கிறீன் காக்கா.

கிறீன் காக்கா என்றால் பச்சைக் காக்கா என அர்த்தமல்ல கரீம் கிறீன் ஆனார் அவ்வளவுதான்.

அவரது கதை வெகு சுவராஸ்யமானது

(தொடரும்)

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## அப்போதைய அகப்பை இப்போதில்லை!

'நாங்க பாவிச்சதெல்லாம் அகப்பைதான், இப்போது பாவிப்பதும் அகப்பைதான்' என்கிறார் பாலசுந்தரம்.

மண்சட்டியில் சமைத்து அகப்பையால் பறிமாறிய உணவை உண்பதில் உள்ள சுவையும், அதனால் கிடைக்ககூடிய ஆரோக்கியமும் தற்போது பயன்படுத்துகின்ற அலுமினிய பாத்திரப் பாவனையில் கிடைப்பதில்லை. இது ஒருபுறமிருக்க படுவான்கரைப் பிரதேசத்து மக்கள் அப்போது, தொழிலுக்காக வெளி இடங்களுக்கு செல்வதென்பது மிக அரிதே. நிறைவான தொழில்கள் படுவான்கரைப் பகுதியிலேயே இருந்தன. விவசாயம், கைப்பணிப்பொருட்கள், கூலி வேலையென அடிக்கிக்கொண்டே



போகலாம். தற்போதைய இயந்திரமயமாக்கலினால், இயந்திரங்களே அதிக வேலைகளை செய்கின்றன. இதனால் நம்மடவர்களுக்கு தொழில்வாய்ப்பு இல்லாப் பிரச்சினையேற்பட்டிருக்கின்றது, தேசம் விட்டுத் தேசம் செல்லும் நிலைமை உருவாகியுள்ளதென கூறுகிறார் நல்லதம்பி.

40 வருடங்களுக்கும் மேலாக செய்துவருகின்ற, அகப்பை செய்யும் தொழிலை இப்போதுதான் கைவிட்டிருக்கின்றேன். கண்பார்வை குறைந்ததினாலேதான் அத்தொழிலையும் விட்டேன். எப்போதெல்லாம் நேரம் கிடைக்குமோ, அப்போதெல்லாம் இதனை செய்வேன். முன்னர் எல்லோரும் அகப்பையினை பயன்படுத்தினர். இதனால் அகப்பைக்கான கேள்வியும் இருந்தது. இப்போதெல்லாம் ஒரு சிலரே பயன்படுத்துகின்றனர். அதனால் கேட்பவர்களுக்கு மட்டும் அகப்பையை செய்து கொடுத்து வந்தேன். அகப்பை செய்வதென்பதுவும் இலகுவான

**படுவான் பாலகன்**

காரியமல்ல. இதற்கு பொறுமை மிக அவசியமானதொன்று. பொறுமையை இழந்தால் அகப்பை பெற்றுவிட முடியாது. தனிமையில் இருந்து அதே சிந்தனையில் செய்ய வேண்டும். இல்லாவிட்டால், நீண்டநேரம் கஸ்டப்பட்டதிற்கும் பயனில்லாமல் போய்விடும் எனக்கூறுகின்றார் நல்லதம்பி. இவர் ஏன்?, இப்படி கூறுகின்றார் என பலருக்கு சிந்தனை வரலாம். சிரட்டையில் கம்பை ஏற்றிவிடுவதுதானே!, இதுபெரிய வேலையா? எனவும் சிலர் கேட்கலாம். உண்மையில் நல்லதம்பியின் கருத்துப்படி அகப்பை செய்வதென்பது இலகுவான



காரியமல்ல. முதலில் சிரட்டைகளை எடுத்து நீரில் இழக வைக்க வேண்டும். இதற்காக தேங்காயின் பின்பகுதி சிரட்டையையே பயன்படுத்த வேண்டும். அச்சிரட்டை நீரில் இழகியதன் பின்பு அதன் உள்ளும் புறமும் சீவவேண்டும். இதற்காக எந்த இயந்திரங்களையும் பயன்படுத்தவில்லை. உளி, கத்தி போன்ற உபகரணங்களைப் பயன்படுத்தியே சிரட்டையை சீவியெடுக்கின்றோம். சிரட்டை சீவியதன் பின்பு, அதற்கான காம்பினையும் சீவியெடுத்துக்கொள்கின்றோம். காம்பிற்காக, கல்விண்ணாங்கு, சேரி, சமுளை போன்ற மரங்களின் கம்புகளையே பயன்படுத்துகின்றோம். இக்கம்புகளைப் இப்போது பெற்றுக்கொள்வதிலும் சிக்கல் நிலவுவதாகவும் சங்கரப்பிள்ளை குறிப்பிடுகின்றார்.

சிரட்டையையும், காம்பினையும் சீவியெடுத்தன் பின்பு, சிரட்டையில் இருதுளையிட்டு காம்பினை ஏற்றவேண்டும். இங்குதான் நிதானமும், மன ஒருமைப்பாடும் தேவைப்படுவதாக கூறுகின்றார். காம்பினை சிரட்டையில் ஏற்றும் போது, எமது பலத்தினையும் காட்டிவிட முடியாது. ஆறுதலாக காம்பினை ஏற்றவேண்டும். அப்போதுதான் அகப்பை கிடைக்கும். இல்லாவிடின், நிதானம் தளருமாயின் சிரட்டையில் துளையிடப்பட்ட பகுதி வெடிப்புவிடவோ, ஓட்டையாகவோ சந்தர்ப்பமாகும். அவ்வாறொரு நிலையேற்பட்டால் சிரட்டையை தூக்கியெறியும் நிலை ஏற்படும். அவ்வாறான தருணங்கள் தமக்கு ஏற்பட்டதாகவும், அப்போது, மனம் சலித்துபோனதாகவும், அதற்காக அகப்பை செய்யாமல் விட்டதில்லை. ஆரம்பத்திலேயே அவ்வாறான சிக்கல்கள் ஏற்பட்டன. பின்னர், அதில் உள்ள அனுபவம் இலகுவாக செய்யக்கூடிய நிலையினை உண்டுபண்ணியுள்ளது. இற்றைக்கு இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் அகப்பை ஒருசோடியின் விலை 25 ரூபாயாக இருந்தது. இப்போ, 150 ரூபாய் வரைக்கும் செல்கிறது, அகப்பையின் பருமத்தினைப் பொறுத்து இதைவிட, கூடவும், குறையவும் விற்பனை செய்ய முடியும். ஒரு நாளைக்கு ஐந்து அகப்பை செய்யலாம், முழுமுச்சாகவிருந்தால் அதைவிட கூடவும் செய்யலாம். இப்போதெல்லாம், இதனைதொழிலாக யாரும் செய்வதில்லை. எங்களைப்போன்ற 65 வயதினைக் கடந்த ஒருசிலர் மாத்திரம், தொழில் என்று இல்லாமல், கேட்பவர்களுக்கு செய்து கொடுத்துக்கொண்டு வருகின்றனர். இதைத் தொழிலாகவும் செய்யலாம். அதற்கு முன்வருபவர்களும் மிகவும்



குறைவே. உண்மையில் வீட்டில் இருந்து கொண்டு செய்யகூடிய, பெரிதாக முதலீடு இல்லாத தொழில், இவ்வாறான தொழில்கள் ஊக்கப்படுத்தப்பட்டு, அதற்கான சந்தை வாய்ப்புக்களையும் ஏற்படுத்தும் பொருட்டு இவ்வாறான தொழில்களை பெருமளவில் செய்யும் உற்பத்தியாளர்களை உருவாக்க முடியும். அதேவேளை சிரட்டையில் அமைந்த அகப்பைகளையும், மண்சட்டியினையும் பயன்படுத்துபவர்களாக நமது மக்கள் மாறுகின்ற போது, ஆரோக்கியமான மனிதர்களையும் உருவாக்க முடியும் எனக்கூறிக்கொண்டிருந்தார் சங்கரப்பிள்ளை.

---

## சொல்லத் துணிந்தேன்! 07

21 – 04- 2019 இல் உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற தொடர்குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி நிகழ்வுகள் நாடளாவிய ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் நாளும் நடைபெறுகின்றன. இலங்கை ஜனாதிபதி, பிரதமர் உட்பட உலக நாடுகளின் தலைவர்கள் பலர் இச்சம்பவங்களை வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். இன, மத, கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் அரசியல்வாதிகள், ஆன்மீகத்தலைவர்கள் உட்பட அனைத்துத் தனரப்பினரும் இதனைக் கண்டித்துள்ளதுடன் தமது கவலையையும் வெளிப்படுத்தியுள்ளனர். உயிரிழந்தவர்களுக்கான மற்றும் உறவுகளை, குடும்ப உறுப்பினர்களை பறிகொடுத்து உளவியல் தாக்கங்களுக்குள்ளானவர்களுக்கான மற்றும் காயப்பட்டவர்களுக்கான மனிதநேயக் கடப்பாடுகளும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களாலும் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவை ஒருபுறமிருக்க, இக்குண்டுத்தாக்குதல் நடந்து மூன்று வாரங்கள் கடந்த நிலையில் ஒரு பத்தி எழுத்தாளன் என்ற வகையில் பொதுமக்களின் மனங்களில் இயல்பாக எழுந்து, பரவலாகும் பகிரங்கமாகவும் பேசப்படுகின்ற விடயங்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதே இப்பத்தியின் நோக்கமாகும்.



மட்டக்களப்பில் குண்டுத்தாக்குதலை மேற்கொண்ட தற்கொலைக்குண்டுதாரி காத்தான்குடியை சேர்ந்தவர் என்ற சந்தேகம் அன்றைய தினமே மின் ஊடகங்களில் பொதுமக்கள் இடையே பேசப்படலாயிற்று. மேலும் சில தினங்களில் பல தமிழ், சிங்கள சமூகத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகளினாலும் பல பொது அமைப்புக்களினாலும் கிழக்கு மாகாண ஆளுனர் ஹிஸ்புல்லாஹ் மற்றும் அமைச்சர் றிசாட் பதியுதீன் ஆகியோரை நோக்கி எல்லாத்திசைகளில் இருந்தும் விரல்கள் நீட்டப்பட்டன. இவர்கள் இருவருமே நிரபராதிகளாகக் கூட இருக்கலாம். அதுவேறு விடயம். ஆனால், "நல்லாட்சி" என்று வர்ணிக்கப்படும் ஒரு அரசாங்கத்தின் கீழே இரண்டு விடயங்கள் இடம்பெற்றிருக்க வேண்டும்.

ஒன்று; ஆளுனர் ஹிஸ்புல்லாவும் அமைச்சர் றிசாட் பதியுதீனும் தாமாகவே தமது பதவிகளை இராஜினாமாச் செய்து, தாமாக முன்வந்து விசாரணைகளுக்கு முகம்கொடுத்து, தங்களை நிரபராதிகள் என நிரூபித்து, அதனைப் பகிரங்கப்படுத்தி இருக்கவேண்டும். அல்லது; இரண்டு; இவர்களுக்கு இப்பதவிகளை வழங்கிய ஜனாதிபதி, அவர்களுக்கான அந்நியமனங்களை மீளப்பெற்று, இருவரையும் கைது செய்யவேண்டிய அவசியம் இல்லாவிட்டாலும்கூட வீட்டுக்காவலில் வைத்தாவது விசாரணையை நடாத்தி அவர்களை நிரபராதிகள் எனில் அதனைப் பகிரங்கமாக மக்களுக்கு அறிவித்திருக்க வேண்டும்.

இவ்விரண்டில் ஒன்றுமே நடைபெறாதபோது மக்களின் மனதில் சந்தேகங்கள் எழுவது தவிர்க்கமுடியாததே. மேலும் இப்படியான சந்தர்ப்பங்களில் அதுவும் அவர்கள் மீது சந்தேகங்கள் எழுப்பப்பட்ட சூழ்நிலையில் 'ஆளுனர் ஹிஸ்புல்லா அவர்கள் மலேசியா செல்ல முற்பட்டு, அதற்கு ஜனாதிபதி அவர்கள் அனுமதி வழங்கவில்லையென்றாலும் அமைச்சர் றிசாட் பதியுதீன் அவர்கள் ஓமான் நாட்டுக்குச் சென்றுள்ளார்' என்று மின் ஊடகங்களில் வந்த

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

செய்திகள் பொதுமக்களுக்கு தவறான சமிக்ஞைகளை வழங்கக்கூடும். இவர்கள் இருவரும் இச்சந்தர்ப்பத்தில் தமது வெளிநாட்டுப் பயண எண்ணங்களைத் தவிர்த்திருக்கலாம்.

பொதுவாழ்வில் உள்ளவர்கள் சந்தேகத்துக்கு அப்பால் தங்கள் நடத்தையை நிரூபிக்க வேண்டும். அரசாங்கமும் உயரிய பொறுப்பில் உள்ளவர்களும் தார்மீகத்தையும் (MORALITY) கண்ணியத்தையும் (CREDIBILITY) நம்பகத்தன்மையையும் பேணுவதும் "நல்லாட்சி"க்கு தேவையாகும்.

மக்கள் மனங்களில் வீணான சந்தேகங்களும் குழப்பங்களும் எழாத வகையில் பார்த்துக்கொள்வதும் அரசாங்கத்தின் பாரிய பொறுப்பாகும்.

# வாசிப்பின் வலிமை: வேர்ஜீனியா மாநில நீதிமன்றத்தில் ஓர் வித்தியாசமான தீர்ப்பு



அமெரிக்காவின் வடக்கு வெர்ஜீனியா (Northern Verginia) மாநிலத்தில் ஒரு அமைதியான கிராமம் ஆ'பேர்ண். இங்குள்ள கறுப்பினத்தவர்களுக்கான சிறிய பள்ளியொன்றின் சுவர்களில் செப்டெம்பர் 2016இல், சில வி'மிகளால் இனவாத சுலோகங்கள் இரவோடிரவாக எழுதப்பட்டிருந்தன. இச்செயலானது அங்கு தலைதூக்கியிருந்த கறுப்பினத்தவருக்கு எதிரான KKK இனவாத இயக்கத்தின் கைவரிசையெனவே ஆரம்பத்தில் அம்மக்கள் நம்பினர். ஆனால் அந்தக் கிறுக்கல்களுக்கிடையே டைனோசர்களினதும் வேறு சில்லறைத்தனமான அடையாளங்களையும் கூர்ந்து அவதானித்த பாதுகாப்புத்துறையினர், இலகுவில் உண்மைக் குற்றவாளிகளை இனம்கண்டுகொண்டனர்.


பாடசாலை நிர்வாகத்தினரால் இடைநிறுத்தப்பட்டிருந்த ஐந்து 'குளப்படிகாரச் சிறுவர்களே'' அவர்கள். பாடசாலை நிர்வாகத்துடன் கொண்ட காழ்ப்புணர்வின் வெளிப்பாடாக இந்த கிராமத்துப் பாடசாலைக் கட்டிடத்தில் தங்கள்



கைவரிசையைக் காட்டியிருந்தார்கள். அவர்கள் 16-17 வயதுடைய ஐந்து வெள்ளையினச் சிறுவர்கள் என்று கண்டறிந்ததும், அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்தவர் அலெஜான்ட்ரா ரூடா (Alejandra Rueda) என்ற பெண் நீதிபதியாவார். அக்குற்றச்செயலில் சம்பந்தப்பட்டிருந்த சில சிறுவர்களுக்கு தாம் சுவரில் தீட்டிய சுவஸ்திகா இலச்சினையின் அர்த்தம் கூடப் புரிந்திருக்கவில்லை. சிறுவர்களின் வயதையும், குற்றச்செயலின் இனவாதத் தீவிரத்தையும் மனதிற்கொண்ட நீதிபதி, விசாரணையின் இறுதியில் அந்த ஐவருக்கும் வித்தியாசமானதொரு தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார்.

அதாவது, குற்றவாளிகள் ஐவருக்கும் முப்பத்தைந்து ஆங்கில நூல்களின் தலைப்பை வழங்கி ஒரு வருட காலத்தில் அவர்கள் ஒவ்வொருவரும் அந்த முப்பத்தைந்து நூல்களில் ஏதாவது பன்னிரண்டு நூல்களை மாதத்திற்கொன்று என்ற ரீதியில் தெரிவுசெய்து, அவற்றினை ஆழமாக வாசித்து, தாம் வாசித்த ஒவ்வொரு புத்தகத்தின் சாரத்தையும் அடிப்படையாகக் கொண்டு, அந்த நூல்கள் பற்றிய பன்னிரண்டு ஆய்வுகளை ஒவ்வொருவரும் நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்கவேண்டும். இதனைச் செய்யத் தவறும் பட்சத்தில் தீவிர தண்டனையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இதுவே அவரது தீர்ப்பு. இத்தகைய தண்டனைகள் இளையோர் குற்றவியல் கோவையில் 'இயற்பண்பு சார்ந்தவை'' (Disposition) என்று குறிப்பிடப்படுகின்றன.

நீதியரசர் கொடுத்த முப்பத்தைந்து புத்தகங்களின் பட்டியலில் அலிஸ் வோக்கரின் ஊதா நிறம், (The Color Purple), சாயிம் பொட்டொக்கின் எனது பெயர் ஆ'ர் லெவ் (My Name is Asher Lev), மாயா அஞ்ஜெலாவின் கூண்டுப்பறவை ஏன் பாடுகின்றது என்று நானறிவேன் (ஐ மழெற றால வாந ஊயபநன டீசைன எபைெள), அலன் பட்டொன் எழுதிய என்னுயிர் நாடே நீ அழு (Cry The Beloved Country), காலிட் ஹுசெய்னி எழுதிய கைட் ரண்ணர் (Kite Runner) ஆகிய நூல்களும் அடங்கியிருந்தன.




நீதிபதியின் தீர்ப்பை பெரும்பான்மையான கறுப்பினத்தவர்கள் ஏற்க மறுத்தனர். அந்த ஐவரும் வெள்ளையினத்தவராக இருந்ததால் தான் இத்தகைய அர்த்தமற்ற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதெனவும் அவர்கள் கறுப்பினப் பிள்ளைகளாக இருந்திருந்தால் தீர்ப்பு வேறுவிதமாக மாற்றி எழுதப்பட்டிருக்கும் என்று முணுமுணுத்தனர். நீதிபதி அலெஜான்ட்ரா ரூடா தனது தீர்ப்பை மாற்றிக்கொள்ளத் தயாராகவில்லை. இவர்கள் ஐவரும் இளம் குற்றவாளிகள். இவர்களை வளர்ந்தோருக்கான சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்க சட்டத்தில் இடமில்லை. ஆகக்கூடிய தண்டனையாக இளையோர் சீர்திருத்தப் பள்ளிகளுக்கு அனுப்பலாம். அங்குசென்று இவர்கள் அங்குள்ள குற்றவாளிகளால் மூளைச் சலவை செய்யப்பட்டு, மேலும் தீவிரமான இனவாதிகளாகத் திரும்பிவரவும் கூடும். குறைந்த பட்ச தண்டனையாக மாதமொரு முறை பொலிஸ் நிலையத்துக்கு வந்து கையெழுத்து இட்டுச் செல்லப் பணிக்கலாம். இவை எதுவும் இப்பிள்ளைகளின் சமூக ஒருமைப்பாடு, சகிப்புத்தன்மை தொடர்பான அறியாமையைப் போக்காது. புத்தகங்கள் மட்டுமே அதனைச் செய்யக்கூடும். அதனால் ஓராண்டின் பின்பு இவர்களை மீண்டும் பார்ப்போம். பொறுத்திருங்கள். அவர்களுக்கு வேண்டிய புத்தக வசதிகளை பெற்றோரும், கிராம நூலகமும் செய்துதரவேண்டும் என்று தனது முடிவில் தீர்க்கமாக இருந்தவிட்டார்.

இத நடந்து ஓராண்டு முடிவில் இந்த ஐவரையும் மீண்டும் நீதிமன்றுக்கு அழைத்து அவர்களது வாசிப்பின் பின்னர் தயாரித்திருந்த ஆய்வேடுகளை பரிசீலனை செய்யும் பணியை நீதித்துறை ஏற்பாடு செய்திருந்தது.

அண்மையில் இந்த ஐவரையும் பற்றிய ஒரு கள ஆய்வினை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சியை, பீ.பீ.சீ. தொலைக்காட்சிக்காக, ஊடகவியலாளர் எம்மா ஜேன் கெர்பி மேற்கொண்டிருந்தார். அதில் மேற்படி ஐந்து இளையோரையும் உரையாட வைத்திருந்தார். அந்நிகழ்வின் வாயிலாகக் கண்டறிந்த உண்மை பார்வையாளர் அனைவரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது. புத்தகத்தின் சக்தியை நவீன உலகம் மீண்டும் அறிய வைத்திருக்கிறது.

செப்டெம்பர் 2016 இல் அவர்கள் மேற்கொண்ட குற்றச்செயலுக்குப் பின்னர் அவர்கள் இரண்டாண்டுகளாக எவ்விதமான குற்றச் செயல்களிலும் ஈடுபட்டிருக்கவில்லை. அவர்களது தண்டனைக்கால வாசிப்பு, அவர்களது அறிவுக்கண்களை அகலத் திறந்துவிட்டிருக்கிறது. அண்மையில் அவர்கள் தொலைக்காட்சியில் மேற்கொண்ட சுயபரிசீலனை வெளிப்படைத் தன்மையுடையதாக எவ்வித மேடை நடிப்புக்கும் ஆட்படாதவகையில் அறிவுபூர்வமாக அமைந்திருந்தது. அவர்கள் வாசித்த நூல்கள் அவர்களை அடிப்படைவாதம், இனவாதம், என்றால் என்ன என்பதையும், நாஜிகள் ஜேர்மனியில் யூதர்களுக்கெதிராக மேற்கொண்ட மனிதநேயமற்ற இனப்படுகொலையின் தார்ப்பரியம் என்பவற்றையும் தெளிவாகப் புரியவைத்திருக்கிறது. அங்கு பேசிய ஐவருள் ஒருவன், 'தென்னாபிரிக்காவில் நிலவிய நிறவாதம் பற்றிய எதுவுமே அறிந்திராத எனக்கு அலன் பட்டனின் நூல்களே அறியாமை இருளை அகற்றிவைத்த அகல் விளக்காக அமைந்துவிட்டன. கறுப்பினம்-வெள்ளையினம் என்பவற்றுக்கும் மேலாக மனித இனம் என்றொன்று உள்ளதை எனக்கு அவரது நூல் புரியவைத்தது'' என்றான். 'அதுவரை நாம் கற்ற பாடசாலைக் கல்வியில் இவையெதுவும் எமக்கு உறைக்கவேயில்லை. சக மாணவர்களை நிறத்தையும், இனத்தையும் அடிப்படையாக வைத்து இவ்வளவுகாலமும் எம்மால் ஒதுக்கிவைக்க எம்மால் எப்படி முடிந்துள்ளது?''

என். செல்வராஜா
நூலகவியலாளர், லண்டன

என்று வருத்தப்பட்டான் மற்றொரு சிறுவன். மற்றொரு சிறுவன், தான் லியோன் ஊரிஸ் எழுதிய 'எக்சோடஸ்'' என்ற நூலை வாசிக்கும் வரை 'இஸ்ரவேல்'' என்ற நாடு பற்றி எதுவுமே அறியமுற்படவில்லை என்றான்.

ஈழத்தில் வாசிப்பை நேசிப்பவர்களுக்கு இந்த வழக்கும் அதன் தீர்ப்பும் நிச்சயமாக எட்டவேண்டும் என்பதே எனது இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும். மேற்படி ஐந்து மாணவர்களினதும் கூற்றுக்களை பீ.பீ.சீ. நிகழ்ச்சியில் செவிமடுத்து முடித்ததும் எனக்கு சமூக உணர்வுள்ள ஒரு நூலகவியலாளன் என்ற வகையில் சில கேள்விகள் கிளர்ந்தெழுந்தன.

இலங்கையில் நூலகர்களாகப் பயின்ற எமக்கு இன ஒருமைப்பாடு பற்றி மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தத் தக்க சில நல்ல நூல்களை பரிந்துரை செய்யத் தயாராக இருக்கிறோமா?

அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் இனவாத சிந்தனைகளால் சிதைவுறாமல் சிங்கள மக்கள் பற்றியும், இஸ்லாமியர்கள் பற்றியும், தமிழர் பற்றியும் மற்றவர்கள் அறிந்துகொள்ளக்கூடிய பொதுத்தளம் ஒன்றினை ஏற்படுத்திவைத்திருக்கிறோமா?

மேலாதிக்க உணர்வுடன் தமிழ், முஸ்லீம் மக்களை எதிர்கொள்வதில் குறியாக இருக்கும் சிங்கள-ஆங்கில பத்திரிகைகளும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் ஏற்படுத்திவைத்துள்ள தளத்தை மறுதலித்து, ஒரு நாட்டின் சம அந்தஸ்துள்ள மூவின மக்கள் என்ற கருத்தை கட்டியெழுப்ப தமிழ் சிங்கள இலக்கியகர்த்தாக்கள் இதுவரைகாலமும் இணைந்து முயற்சிசெய்ததாக வரலாற்றில் பதிவுகள் ஏதும் உள்ளனவா?

இன ஒருமைப்பாடு தொடர்பாக இதுவரை எழுதப்பட்டுள்ள மும்மொழிகளிலுமான நூல்கள் சிலவற்றை இலங்கையின் அறிவுஜீவிகள் பட்டியலிட்டு ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் ஏன் வழங்கமுடியாதுள்ளது?

இதனை கல்வித் திணைக்களம் பாடசாலை நூலகங்களில் கட்டாய இருப்பில் வைத்திருக்க அதிபர்களுக்கு ஏன் பணிக்கக்கூடாது?

அமெரிக்காவில் நடந்தது போன்று ஒரு அலெஜான்ட்ரா ரூடா (யுடநதயனெசய சுரநனய) எம்மிடையே எழுந்துவரும் வரையும் காத்திராமல் அரசியல்வாதிகளால் சின்னாபின்னப்பட்டிருக்கும் இன ஐக்கியத்தினை ஏன் அறிவுஜீவிகள் கைகளில் ஏந்தக்கூடாது?

இவை அனைத்தையும் கல்விச் சமூகத்தினதும் நூலகர்களினதும் சிந்தனைக்கு விட்டுவைக்கிறேன்.



# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 35

## க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

### இலக்கணம்

1. உயிரளபெடை பற்றி விளக்குக.

இசைகெடின் மொழிமுதல் இடைகடை நிலைநெடில்
அளபெழும் அவற்று அவற்றின் இனக்குறில் குறியே. (நன். சூ. 91)

செய்யுளில் ஓசை குறையுமிடத்து சொல்லின் முதலிலாவது இடையிலாவது இறுதியிலாவது நின்ற ஏழு நெடில் எழுத்துக்களும் தம்மாத்திரையிலிருந்து அதிகரித்து ஒலிக்கும். அவ்வாறு அதிகரித்து ஒலித்தமைக்கு அதாவது அளபெடுத்தமைக்கு அறிகுறியாக அந்த நெடில் எழுத்துக்களின் இனமாகிய குறில் எழுத்துக்கள் அருகில் எழுதப்படும்.

- (உ-ம்): சொல்லுக்கு முதலில் அளபெடுத்தல் : வாஅராய், ஈஇதல், .........
- (உ-ம்): சொல்லுக்கு இடையில் அளபெடுத்தல் : வாராஅய், தேனீஇக்கள்.........
- (உ-ம்): சொல்லுக்கு இறுதியில் அளபெடுத்தல் : வாடாஅ, தேனீஇ, .........

இவ்வாறு ஏனையவற்றுக்கும் உதாரணம் கண்டுகொள்க.

சொல்லுக்கு முதலில் அளபெடுக்கும் அளபெடையை " முதனிலை அளபெடை" என்றும் சொல்லுக்கு இடையில் அளபெடுக்கும் அளபெடையை " இடைநிலை அளபெடை" என்றும் சொல்லுக்கு இறுதியில் அளபெடுக்கும் அளபெடையை " இறுதிநிலை அளபெடை" என்றும் குறிப்பிடுவர்.

இந்த உயிரளபெடையை இயற்கை அளபெடை என்றும் செயற்கை அளபெடை என்றும் குறிப்பிடுவதுண்டு. மரூஉ, குரீஇ, ஆடூஉ என்று வருவனவற்றை இயற்கை அளபெடை என்றும் செய்யுளில் ஓசை குறையுமிடத்து இசை நிறைத்தற் பொருட்டு அளபெடுக்கும் வாராஅய், ஈஇதல் என்று வருவனவற்றைச் செயற்கை அளபெடை என்றும் குறிப்பிடுவர். உயிரளபெடை 21 ஆகும்.

2. ஒற்றளபெடை பற்றி விளக்குக.

ஙஞண நமன வயலள ஆய்தம்
அளபாம் குறில்இணை குறிற்கீழ் இடை கடை
மிகலே அவற்றின் குறியாம் வேறே. (நன். சூ. 92)

ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள, ஃ ஆகிய பதினொரு ஒற்றுக்களும் இரண்டு குறிலெழுத்துக்களை அடுத்தும் தனிக் குறிலெழுத்தினை அடுத்தும் சொல்லின் இடையிலும் இறுதியிலும் வந்து தம்மாத்திரையிலிருந்து அதிகரித்து அதாவது அளபெடுத்து ஒலிக்கும். அவ்வாறு அதிகரித்து ஒலித்தமைக்கு அதாவது அளபெடுத்தமைக்கு அறிகுறியாக அந்த ஒற்றுக்களே மீண்டும் அருகில் எழுதப்படும்.

- (உ-ம்): சொல்லுக்கு இடையில் குறிலிணையின்கீழ் அளபெடுத்தல்: சுரங்ங்கம், கழஞ்ஞ்சு, …
- (உ-ம்): சொல்லுக்கு இடையில் தனிக் குறிலின்கீழ் அளபெடுத்தல்: பங்ங்கு, மஞ்ஞ்சு, …
- (உ-ம்): சொல்லுக்கு இறுதியில் குறிலிணையின்கீழ் அளபெடுத்தல்: குணம்ம், மகன்ன், …
- (உ-ம்): சொல்லுக்கு இறுதியில் தனிக் குறிலின்கீழ் அளபெடுத்தல்: விண்ண், அம்ம், …

இவ்வாறு ஏனையவற்றுக்கும் உதாரணம் கண்டுகொள்க.
ஒற்றளபெடை 42 ஆகும்.

உயிரளபெடைக்கு 'இசைகெடின்' என்று கூறியது போல ஒற்றளபெடைக்குக் கூறவில்லை. ஆனால் 'இசைகெடின்' என்பதைக் கூட்டிக்கொள்ளும்படி உரையாசிரியர்தான் சொல்கிறாரே தவிர நன்னூலார் கூறவில்லை.

3. ஆய்தக் குறுக்கம் பற்றி விளக்குக.

லள ஈற்று இயைபினாம் ஆய்தம் அஃகும். (நன். சூ. 97)
லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சியில் வரும் ஆய்த எழுத்து, தன் மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிக்கும்.

- (உ-ம்): அல் + திணை = அஃறிணை
- (உ-ம்): முள் + தீது = முஃடீது

சார்பெழுத்தின் வகைபற்றிக் கூறும் நன்னூற் சூத்திரத்தில் ஆய்தக் குறுக்கம் என்று சொல்லப்படவில்லை. 'அஃகிய தனிநிலை' என்றுதான் சொல்லப்பட்டுள்ளது. அதாவது ஆய்தத்தைத் 'தனிநிலை' என்றுதான் குறிப்பிட்டுள்ளார். சார்பெழுத்தின் விரிபற்றிக் கூறும் நன்னூற் சூத்திரத்தில் ஆய்தக் குறுக்கம் என்று சொல்லப்படவில்லை. 'அஃகும் ஆய்தம்' என்றுதான் சொல்லப்பட்டுள்ளது. ஆய்தக் குறுக்கம் 2 ஆகும்.

4. ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம் பற்றி விளக்குக.

தற்சுட்டு அளவு ஒழி ஐம்மூ வழியும்
நையும் ஔவும் முதல் அற்றாகும். (நன். சூ. 95)

தன்னைக் குறித்து நிற்கும் போது தன் மாத்திரையில் நின்று குறைந்து ஒலிக்காமல் அதாவது குறுகாமல் சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும் போது குறைந்து ஒலிப்பது, ஐகாரக் குறுக்கம் ஆகும்.

- (உ-ம்): சொல்லுக்கு முதலில் வரும் போது குறுகுதல் : ஐந்து, மையல்.
- (உ-ம்): சொல்லுக்கு இடையில் வரும் போது குறுகுதல் : அமைச்சர், இறைவன்,
- (உ-ம்): சொல்லுக்கு இறுதியில் வரும் போது குறுகுதல் : மழை, கோழை.

ஐகாரக் குறுக்கம் 3 ஆகும்.

# கற்போம்

தன்னைக் குறித்து நிற்கும் போது தன் மாத்திரையில் நின்று குறைந்து ஒலிக்காமல் அதாவது குறுகாமல் சொல்லின் முதலில் வரும் போது குறைந்து ஒலிப்பது, ஔகாரக் குறுக்கம் ஆகும்.

- (உ-ம்): சொல்லுக்கு முதலில் வரும் போது குறுகுதல் : ஔவை, மௌவல், …

ஔகாரக் குறுக்கம் 1 ஆகும்.

**குறிப்பு** : ஐகாரக் குறுக்கத்துக்கும் ஔகாரக் குறுக்கத்துக்கும் ஒரு சூத்திரத்திரமே தரப்பட்டுள்ளது.

## என் தமிழின் முகவரி

என்தமிழுக்கு முகவரிதந்த என்தமிழ் ஆசானுக்கு
என்னினிய தமிழாலே சாற்றுகிறேன் பாமாலை
முன்பருவ வயதினிலே முகிழ்த்ததமிழ் ஆசையிலே
மேன்மேலும் படிக்கவென்று முயன்றுவந்த வேளையிலே
அன்பாலே அரவணைத்து ஆளுமையைத் தான்விதைத்து
அழகுதமிழ் படிக்கவைக்க ஆசிரியர் பதவிகொண்டு
முன்வந்த பெருந்தகையே சாரங்க பாணிஐயா
முயலுகிறேன் கவிநடையில் நும்பெருமை ஆளுமையா

நேர்கொண்ட பார்வையிலே நிலைகுலைவான் எதிராளி
நெகிழாத வார்த்தையிலே தலைநிமிர்வான் பங்காளி
மார்நிமிர்ந்த நடையினிலே மாமலையும் பின்னாடி
மனமுவந்து கொடுக்கையிலே மற்றவர்க்கு முன்னோடி
நேர்கொண்ட முடிகூட நேர்மைக்குச் சான்றாகும்
நின்குரல் கேட்டாலே நிசப்தம் பதிலாகும்
கார்கொண்ட மழைபோலத் தமிழ்நாவில் சொரிந்துவிழும்
கேட்டாலே கோழைக்கும் மாவீரம் தான்பிறக்கும்

வகுப்பறைக்கு வந்தாலே வசியம்தான் மாணவர்கள்
வயமிழந்து சொல்கேட்டுப் பக்குவமாய் ஆவார்கள்
வகுத்தவழி பிறழாமல் வாய்ப்பாடம் சொல்வார்கள்
வரிக்குவரி சிலேடையிலே வார்த்தைகளை ரசிப்பார்கள்
தொகுத்தாலே எமைவளர்த்த தமிழாசான் என்பார்கள்
தரணியிலே அதுவுண்மை எல்லோரும் ஏற்பார்கள்
பகுத்தறிந்து பார்க்கையில்நாம் புண்ணியமே செய்தவர்கள்
பாடம்பல வாழ்வினிலே படிக்கவைத்துப் போனனீர்கள்.

திரு. சிவலிங்கம்,
ஓய்வுநிலை தொழினுட்ப உதகியோகத்தர்,
மட்டக்களப்பு.

**(அகவை 90 இல் அமரும் அமரர் சாரங்கபாணி ஐயாவுக்கு)**

## என்ன செய்ய?

**கமலா வாசுகி**

சாதிப் பெருமையைக் காப்போம்
என்று வன்முறை புரியலாம்
மொழியைக் காப்போம் என்று
வன்முறை புரியலாம்
இன மானத்தைக் காப்போம் என்று
வன்முறை புரியலாம்
மதங்களைக் காப்போம் என்று
வன்முறை புரியலாம்
அகிம்சையைக் காப்போம் என்றால்
என்ன செய்யலாம்?

பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON

IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# விளையாட்டு

## கிரிக்கட் உலகக் கிண்ண வரலாறு

யாசின் அரபாத்

கிரிக்கட் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கும் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை இடம்பெறும் உலகக் கிண்ண கிரிக்கட் சுற்றுத் தொடரின் 12-வது தொடர் எதிர்வரும் மே மாதம் 30-ம் திகதி தொடக்கம் ஜுலை 14-ம் திகதி வரை இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் நடைபெற உள்ளது. இத் தொடர் ஆரம்பிப்பதற்கான நாட்களை எண்ணிக்கொன்டிருக்கும் இவ்வேளையில் கடந்த கால உலகக் கிண்ண பெறுபேறுகள் பற்றி அறிந்துகொள்வோம்.

### முதலாவது உலகக் கிண்ணம் 1975

கிரிக்கட் விளையாட்டானது பழங்கால வரலாற்றினை கொண்டபோதிலும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களை கொண்ட முதலாவது சர்வவேச கிரிக்கட் போட்டி 1971ம் ஆண்டு விளையாடப்பட்டது. அதன் வளர்ச்சியாக முதலாவது உலகக் கிண்ணப் போட்டி 1975ம் ஆண்டு நடைபெற்றது. அப்போதைய காலகட்டத்தில் கிரிக்கட் போட்டிகளுக்கு நிதி அனுசரணை வழங்கிய புருடன்சியல் நிறுவனத்தின் நினைவாக உத்தியோக பூர்வமாக புருடன்சியல் கிண்ணம் என அழைக்கப்பட்ட அத் தொடர் 60 ஓவர்களை கொண்டதாக, பகல் போட்டிகளாக அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், நியூசிலாந்து, இலங்கை, கிழக்கு ஆபிரிக்கா மற்றும் போட்டியை நடாத்திய இங்கிலாந்து உட்பட எட்டு அணிகளை உள்ளடக்கியதாக நடைபெற்றது. இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு நடைபெற்ற குழு நிலை போட்டி முடிவுகளின் அடிப்படையில் அவுஸ்திரேலயா, இங்கிலாந்து, நியூசிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் ஆகிய அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெற்றதுடன் அரை இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றன.

ஜுன் 21ம் திகதி லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் கிளைவ் லொயிட் தலைமையிலான மேற்கிந்திய தீவுகள் அணி அவுஸ்திரேலிய அணியை



17 ஓட்டங்களால் வெற்றிபெற்று முதலாவது உலகக் கிண்ணத்தை வென்று வரலாறு படைத்தது. அப்போதைய தொடரில் தொடர் ஆட்ட நாயகன் விருது வழங்கப்படுவதில்லை. போட்டிகளுக்கான ஆட்ட நாயகன் விருதுகள் மாத்திரமே வழங்கப்பட்டு வந்தன. இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக 102 ஓட்டங்களை பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணித் தலைவர் கிளைவ் லொயிட் தெரிவானார்.

அத் தொடரில் பங்கு பற்றிய இலங்கை அணி ஒரு போட்டியிலேனும் வெற்றிபெற முடியாமல் தொடரிலிருந்து வெளியேறியிருந்தது.

### இரண்டாவது உலகக் கிண்ணம் 1979

முதலாவது உலகக் கிண்ண தொடர் போன்றே புருடன்சியல் கிண்ணம் என அழைக்கப்பட்ட இரண்டாவது உலகக் கிண்ண கிரிக்கட் தொடர் 1979ம் ஆண்டு அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள், நியூசிலாந்து, இலங்கை, புதிய அணியான கனடா மற்றும் போட்டியை நடாத்திய இங்கிலாந்து உட்பட எட்டு அணிகளை உள்ளடக்கியதாக நடைபெற்றது.

குழுநிலைப் போட்டிகளின் முடிவில் இங்கிலாந்து, நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள் ஆகிய அணிகள் அரை இறுதிக்கு தெரிவாகியிருந்ததுடன் அதிலிருந்து இறுதிப் போட்டிக்கு மேற்கிந்திய




தீவுகள் மற்றும் இங்கிலாந்து ஆகியன தெரிவாயின. ஜுன் 23ம் திகதி லோர்ட்ஸ் மைதாணத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் கிளைவ் லொயிட் தலைமையிலான மேற்கிந்திய தீவுகள் அணி இங்கிலாந்து அணியை 92 ஓட்டங்களால் வீழ்த்தி இரண்டாவது கிண்ணத்தையும் கைப்பற்றியது. இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக 138 ஓட்டங்களை பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணியின் விவியன் ரிச்சட்ஸ் தெரிவானார்.

இத்தொடரில் கலந்து கொண்ட துலிப் மென்டிஸ் தலைமையிலான இலங்கை அணி லீக் சுற்றில் இந்திய அணியை 47 ஓட்டங்களால் வீழ்த்தி உலகக் கிண்ண வரலாற்றில் தமது முதலாவது வெற்றியை பதிவு செய்ததுடன் ஏனைய போட்டிகளில் தோல்வியுற்று தொடரிலிருந்து வெளியேறியிருந்தது.

### மூன்றாவது உலகக் கிண்ணம் 1983

மூன்றாவது புருடன்சியல் உலகக்கிண்ண கிரிக்கட் தொடர் 1983ம் ஆண்டு மீண்டும் இங்கிலாந்து மண்ணில் அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள், நியூசிலாந்து, இலங்கை மற்றும் சிம்பாப்வே ஆகிய எட்டு அணிகளுடன் அணிக்கு 60 ஓவர்களாக இடம்பெற்றது. இத்தொடரில் புதிதாக கலந்து கொண்ட சிம்பாப்வே அணி தனது முதல் போட்டியிலேயே பலம் வாய்ந்த அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தி அதிர்ச்சியளித்தது.

குழுநிலைப் போட்டிகளின் முடிவில் இங்கிலாந்து, இந்தியா மற்றும் பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள் ஆகிய அணிகள் அரை இறுதிக்கு தெரிவாகியிருந்ததுடன் அதிலிருந்து இறுதிப் போட்டிக்கு மேற்கிந்திய தீவுகள் மற்றும் இந்தியா ஆகியன தெரிவானது.



1983 ஜுன் 25ம் திகதி லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கபில் தேவ் தலைமையிலான இந்திய அணி மேற்கிந்திய தீவுகள் அணியை 43 ஓட்டங்களால் வெற்றிகொண்டு மேற்கிந்திய தீவுகள் அணியின் தொடர்ச்சியான மூன்றாவது உலகக் கிண்ண சம்பியன் கனவினை தகர்த்து முதலாவது ஆசிய அணியாக உலகக் கிண்ணத்தை சுவீகரித்தது. இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக 26 ஓட்டங்களையும் 3 விக்கட்டுக்களையும் கைப்பற்றிய இந்திய அணியின் சகலதுறை வீரர் மோகிந்தர் அமர்நாத் தெரிவானார்.

இத் தொடரில் ஆறு போட்டிகளில் பங்கு பற்றிய இலங்கை அணி ஒரு போட்டியில் மாத்திரம் நியூசிலாந்து அணியை மூன்று விக்கட்டுக்களால் வீழ்த்தி, வெற்றி பெற்றதுடன் ஏனைய போட்டிகளில் தோல்வியுற்று நாடு திரும்பியது.

### நான்காவது உலகக் கிண்ணம் 1987

1987ம் ஆண்டு ரிலையன்ஸ் கிண்ணம் என்ற பெயரில் நடைபெற்ற இத் தொடரானது இங்கிலாந்துக்கு வெளியே விளயாடப்பட்ட முதலாவது உலகக் கிண்ணத் தொடர் என்பதோடு ஓவர்களும் 50 ஆக குறைக்கப்பட்டிருந்தது. மூன்றாவது உலகக் கிண்ணத் தொடரில் பங்கு பற்றிய அதே எட்டு அணிகள் கலந்து கொண்ட




இத்தொடரினை இந்தியா மற்றும் பாகிஸ்தான் இனைந்து நடாத்தின.

இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு நடைபெற்ற குழுநிலைப் போட்டிகளின் முடிவில் இங்கிலாந்து, இந்தியா மற்றும் பாகிஸ்தான், அவுஸ்திரேலிய ஆகிய அணிகள் அரை இறுதிக்கு தெரிவாகியிருந்ததுடன் அதிலிருந்து இறுதிப் போட்டிக்கு அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து ஆகிய அணிகள் தெரிவாயின. கல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் 1987 நவம்பர் 8ம் திகதி இடம்பெற்ற விறுவிறுப்பான இறுதிப் போட்டியில் அலன் போர்டர் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி 7 ஓட்டங்களால் இங்கிலாந்து அணியை வீழ்த்தி தமது உலகக் கிண்ண கனவை நனவாக்கியது. இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக 75 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலிய அணியின் வீரர் தெரிவானார்.

இத் தொடரிலும் பங்கு பற்றிய இலங்கை அணி விளையாடிய ஆறு போட்டிகளிலும் தோல்வியுற்று நாடு திரும்பியிருந்தது.

(தொடரும்)

## காரைதீவில் மாபெரும் கலாசார விளையாட்டுவிழா!



கிழக்கில் புகழ்பூத்த காரைதீவு விளையாட்டுக்கழகத்தின் 36வது வருடநிறைவையொட்டியும் சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டும் சனிக்கிழமை காரைதீவில் மாபெரும் கலாசார விளையாட்டுவிழா நடைபெற்றது. காலையில் மரதன்ஓட்டம் சைக்கிள்ஓட்டம் சதுப்புநிலஓட்டம் நடுக்கடலில் படகோட்டம் ஆகிய நிகழ்ச்சிகள் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் நடைபெற்றன. அதன்போதான படங்கள் இவை.

(படங்கள் காரைதீவு சகா)

## தேசியமட்ட போட்டிக்கு எட்டாவது முறையாக தகுதி பெற்ற காரைதீவு பிரதேச செயலக அணி.!

(காரைதீவு சகா)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் பிரதேசசெயலகங்களுக்கிடையில் நடாத்திய அம்பாறை மாவட்டமட்ட கூடைப்பந்தாட்டப்போட்டியில் காரைதீவு பிரதேசசெயலக அணி முதலிடத்தைப்பெற்று சாம்பியனானது.

காரைதீவு விபுலாநந்த மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் காரைதீவு பிரதேச செயலக அணியும் சம்மாந்துறை பிரதேசசெயலக அணியும் மோதிக்கொண்டன. இறுதியில் காரைதீவு அணி 85-25 என்ற புள்ளிகள் அடிப்படையில் சம்மாந்துறை பிரதேச செயலக அணியை வெற்றி கொண்டது. இந்த வெற்றியின்மூலம் காரைதீவு அணி தொடர்ச்சியாக எட்டாவது முறையாகவும் தேசியமட்டப்போட்டிக்குத் தெரிவானது என்ற சாதனையையும் நிலைநாட்டியுள்ளது. இறுதிப்போட்டிக்கு தேசிய இளைஞர்சேவை மன்றத்தின் அம்பாறை மாவட்ட இளைஞர்சேவை அதிகாரி எம்.முபாறக் உதவிப்பணிப்பாளர் உள்ளிட்டோரும் கலந்துசிறப்பித்தனர்.

விளையாட்டு உத்தியோகத்தர் பி.வசந்த் நடுவராகக்கடமையாற்றினார்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

தொடர்ச்சி...

## அனர்த்தகால உளவியல் முதலுதவி - பகுதி 3

உங்கள் பயனாளி அதனை உணர்ந்து கொள்ள உதவ வேண்டும். உங்களது பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு நிம்மதியாக இருப்பதற்கு போதை தரும் பொருட்களை பாவிக்கலாமா? இவ்வாறு கேட்கப்படும் கேள்விகளுக்கு பயனாளி அளிக்கும் பதிலைக் கொண்டே பிரச்சினைகளிற்கான முகாமைத்துவத்தில் சரியான உதவியளிக்கும் முறைகள், பிழையான உதவியளிக்கும் முறைகள் என்பவற்றை அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வரைக்கும், தெளிவாக பொதுவாக எடுத்துரைக்க வேண்டும்.

**உதவியாளர் - பயனாளி உறவு முறைகள்-உதவியாளர் வகிபாகம்**

எமது பகுதிகளில் பல்வேறு வகையான உதவியளிக்கும் முறைகள் உள்ளன. இங்கு உதவிநாடிக்கு அவர்கள் வழமையாக செய்யும் முறைகளின் அடிப்படையிலேயே அவ்வுதவி கிடைக்கிறது. பெரும்பாலும் பயனாளி தமது தனிப்பட்ட பிரச்சினைகளை அவர்களுடன் மனம்திறந்து முழுமையாக கதைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. பாரம்பரிய முறைகளுடாக உதவியளிப்பவர்கள், போதகர்கள், நாட்டு வைத்தியர்கள், வாக்கு சொல்லுபவர்கள் போன்ற முறைகளில், அவர்கள் பயனாளிக்கு செய்யும் முறைகளிற்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறான முறைகளும் பாதிக்கப்பட்டவர்கள் மீளெழுவதற்கு உதவிசெய்கின்றன



என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

பிரச்சினைகளிற்கான முகாமைத்துவ உதவியாளராகிய நீங்கள், பயனாளியின் பிரச்சினைகள் ஒவ்வொன்றையும் நன்றாக விளங்கி அதற்கு ஏற்றாற்போல் உதவி செய்பவர் என்பதையும், உங்களது வகிபாகத்தையும் பயனாளியிடம் தெளிவாக எடுத்துக் கூறுங்கள். இவ்வாறாக பயனாளியுடன் உங்களது வகிபாகத்தைப்பற்றி எடுத்துக்கூறும் போது, அதனை அவர்கள் தெளிவாக விளங்கிக்கொள்வதற்கு ஏதுவாக சில உதாரணங்களை கொடுக்கலாம். ஒரு ஆசிரியர் வகுப்பறையில் மாணவனுக்கு பாடங்களை கற்பித்துக் கொடுப்பார். மாணவனது சந்தேகங்களிற்கு பொருத்தமான விளக்கமளிப்பர். பரீட்சை, பரீட்சைகளுக்கான தயார்படுத்தல், படிக்கும் முறைகள், படிப்பதன் முக்கியத்துவம் போன்ற விடயங்களையும் எடுத்துக்கூறுவார். ஆனால் மாணவரிற்காக ஆசிரியர் பரீட்சை எழுத முடியாது. பரீட்சையை மாணவனே எழுத வேண்டும். கற்ற விடயங்களை மீளக்கற்ற, பயிற்சி செய்வது, கடந்த காலப் பரீட்சை வினாக்களிற்கு விடை எழுதிப் பழகுவது போன்றயாவற்றையும் மாணவனே செய்ய வேண்டும்.

வகுப்பறையில் ஆசிரியர், மாணவர் உறவு எப்படி உள்ளதோ, அவ்வாறே உதவியாளர் - பயனாளி உறவும், உதவியளிக்கும் முறைகளும் இருக்க வேண்டும். மேற்கூறிய உதாரணம் மூலம் உங்கள் பயனாளிக்கு உங்களது வகிபாகத்தை எடுத்துக்கூறுங்கள். பயனாளி உங்களது வகிபாகம் எதுவரை என்பதை அறிந்து கொள்ளும் வரைக்கும் அவரிற்கு உதவி செய்யுங்கள். உதவியளிக்கும் அறையில் உள்ள உதவியாளர், பயனாளி ஆகிய இருவரும் திறமைசாலிகள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். பயனாளி தனது சொந்த வாழ்க்கையில் நிறைந்த அனுபவசாலி. அதில் ஒரு சிறுபகுதியே உங்களிற்குள் இருக்கிறது. இதுவரை தனது பிரச்சினைகளுடன் வாழ்ந்தது, முகம்கொடுத்தது போன்ற பல விடயங்கள் உங்கள் பயனாளி செய்துள்ளார். இதனை ஏற்றுக்கொண்டு aஅதன் மூலமாக பயனாளியில் நம்பிக்கையை கட்டி வளர்த்து உதவி செய்ய ஆரம்பிப்பது, பயனாளி குறித்து நீங்கள் எடுக்கப்போகும் சில முடிவுகளை தவிர்ப்பதற்கு ஏதுவாக அமையும்.

**உதவியாளர் - பயனாளி உறவுமுறை எதுவென்பதை தெரிவிப்பதற்கான சில உபாயங்கள்**

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட விவசாய உபகரணம் ஒன்றின் பயன்பாடு குறித்து அதன் பொறியியல் வல்லுநர் விவசாயி ஒருவருக்கு விளங்கப்படுத்தினால் அதனை அறிந்து கொண்ட விவசாயி தனது வயல் நிலத்தில் உபயோகிக்கும் போது அதனது பாவனை, தொழில்நுட்பம் அணுமுறைகள் என்பவற்றை தானே கற்றுக்கொள்ளலாம். இதற்கு தொடர்ச்சியாக அந்த பொறியியல்வல்லுநர் உடனிருக்க வேண்டியதில்லை.

**மருத்துவ உபாயங்கள்**

மருத்துவ உதவியை நாடியுள்ள நோயாளி ஒருவரின் நோய்நிர்ணயம், பாவிக்கும் மருந்துகள், பின்பற்ற வேண்டிய உணவுமுறைகள், நடைமுறை வாழ்க்கை மாற்றம், உடற்பயிற்சிகள் தொடர்சிகிச்சை, மாதாந்த கள தரிசிப்பு என்பவற்றை எடுத்துக்கூறும்போது அதனை விளங்கிக்கொண்ட நோயாளி அவ்வாலோசனைகளைத் தானே பின்பற்றி தனது உடல் நோய்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருதல் வேண்டும். இங்கு வைத்தியர் ஒவ்வொரு நாளும் உடனிருந்து உதவுவதில்லை. மேற்கூறிய உபாயங்கள் மூலம் நீங்கள் உங்களது பயனாளிக்கு எவ்வகையில் உதவி செய்யவுள்ளீர்கள், அதனை பயனாளி எவ்வாறு கிரமமாக பயில வேண்டும் என்பதை கற்றுக்கொடுங்கள்.

**விளையாட்டு பயிற்றுவிப்பாளர் உபாயம்**

தடகள வீரர் ஒருவருக்கு பயிற்றுவிக்கின்ற பயிற்றுவிப்பாளர், உடற்பயிற்சி, தயார்படுத்துதல், ஆரம்பத்தில், முந்திச் செல்லுதல், முடிவுக்கு கொண்டுவருதல், போட்டி போட்டு வெற்றி இலக்கை அடைதல் போன்ற செயற்பாடுகளை பயிற்சியாகவும், செயல்வடிவமாகவும் பயிற்றுநருக்கு சொல்லிக் கொடுத்தால் அதன்படி பயிலும் வீரர் செயற்படுவார். இங்கு பயிற்றுநரிற்காக பயிற்றுவிப்பாளர் ஓடுவதில்லை. மேற்கூறிய உபாயங்கள் மூலம் பயனாளி எவ்விதத்தில் நீங்கள் கூறுகின்ற உதவியளிக்கும் உபாயங்களைப் பின்பற்றி தனது பிரச்சினையில் இருந்து மீளெழுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதை சந்தேகம் இன்றி விளக்கிக் கொள்ளப்படும். அதன்படி நாளாந்தம் நீங்கள் கற்றியக்கூடிய விடயங்களை பயின்று தனது பிரச்சினையில் இருந்து வெளிவரட்டும்.

தொடர்ச்சி...

## பாதுகாப்பற்ற சூழ்நிலை தொடருவதாக பேராயர் கவலை



தொடருமானால் வெசக் பண்டிகை முடிந்த பின்னரே கத்தோலிக்க பாடசாலைகள் திறக்கப்படும் என பேராயர் மெல்கம் ரஞ்சித் குறிப்பிட்டார்.

## ராஜீவ் வழக்கு: 7 பேரை விடுதலை செய்ய தடை கோரிய மனு தள்ளுபடி

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று சிறையில் உள்ள நளினி, பேரறிவாளன் ஏழு பேரையும் விடுதலை செய்வது என்ற தமிழக அரசின் தீர்மானத்துக்கு தடை விதிக்கவேண்டும் என்று கோரி தொடரப்பட்ட வழக்கை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

மனித வெடிகுண்டால் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டபோது உடன் இறந்த ஒருவரது மகனான எஸ்.அப்பாஸ் உள்ளிட்டவர்கள் இந்த வழக்கைத் தொடர்ந்திருந்தனர்.

தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் தலைமையிலான மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்பதா என்பதை வியாழக்கிழமை பரிசீலித்தது.

பிறகு மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டபோது, "இந்த மனுவில் விசாரணைக்கு ஏற்பதற்கு உரிய வாதம் ஏதும் இல்லை" என்று கூறினார் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய்.

ராஜீவ் கொலையில் உடன் இறந்தவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வேண்டும் என்றும் அப்பாஸ் கோரினார்.

ஆனால், இந்த விவகாரத்தில் அரசமைப்புச் சட்ட பெஞ்ச் முடிவு செய்துவிட்ட நிலையில் மீண்டும் இந்த வழக்கை விசாரிக்கப் போவதில்லை என்று தலைமை நீதிபதி தெரிவித்ததாக கூறுகிறார் நீதிமன்ற செய்தியாளர் கூறியுள்ளார்.

## வாப்பா.. வாப்பா!

**எம்.பஹ்த் ஜுனைட்**
**காத்தான்குடி**

வாப்பா.. வாப்பா...

பிஞ்சு மலர் நெஞ்சு வலிக்க கெஞ்சி
அழைக்கிறேன்... வாப்பா..

விளக்கு நெருப்பில்விளையாடக்
கூடாது என்றாய் வாப்பா..
வெடிகுண்டில் வெந்து போய் தேம்பி
அழுகிறேன்
நீ எங்கே வாப்பா..

சுட்ட நெருப்பு என்னை விட்ட
பாடில்லை பொசுங்கிப்போனது உன்
பொக்கிஷமாம்
என் உடல்கள் வாப்பா...

உன்னை அழைக்கச் சொல்லி படம்
பிடிப்பாய் இன்று வலியில் வாப்பா
என அழறுகிறேன் யாரெல்லாமோ
படம் பிடிக்கிறார்கள் என்னை..

பெத்த தாயையும் மொத்த உறவையும்
தொலைத்து தனிமையில்
கதறுகிறேன் வாப்பா..

வந்தவர்கள் வாய்க்கு வந்ததெல்லாம்
பேசுகிறார்கள்...
என்னை என்னென்னவோ
சொல்கிறார் கள்...
நீ எங்கே வாப்பா...?

உன்னை அழுது அழைத்த கண்ணீர்
வறண்டு போவதற்குள் கொஞ்சம்
தண்ணீர் தாயேன் வாப்பா..

உன் மகள் எனக்கு பூச்சி கடித்தால்
புழுவாய் துடிப்பாய்..!

தீயில் வெந்து கிடக்கிறேன் கொஞ்சம்
வந்து பார் வாப்பா...

ஓயாமல் அழுகிறேன்; ஓரமாய் நின்று
வேடிக்கை பார்க்கிறார்கள்...!!

நீ ஓடிவா வாப்பா எனக்கொரு
முத்தம் தா வாப்பா..!!

## விடுதலையின் குறியீடு

**கமலா வாசுகி**

சாதிப் பெருமையைக் காப்போம்
என்று வன்முறை புரியலாம்
மொழியைக் காப்போம் என்று
வன்முறை புரியலாம்
இன மானத்தைக் காப்போம் என்று
வன்முறை புரியலாம்
மதங்களைக் காப்போம் என்று
வன்முறை புரியலாம்
அகிம்சையைக் காப்போம் என்றால்
என்ன செய்யலாம்?

AGNI PULAYAVELY INDUSTRIES

# அக்கினி புலையவெளி உணவு உற்பத்திப் பொருட்கள்

*சைவ முறையில் தயாரிக்கப்பட்டது*

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர்

ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல:- 0771516203

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு



## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

100 கிராம் 60 ரூபாய்

200 கிராம் 120ரூபாய்

## மிக்சர்

1 கிலோ 300ரூபாய்

எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

**(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)**

FCC SUPER MALL
4 Wings for Uplift Your life

ஒரே கூரையின் கீழ் வாழ்வின் அத்தியாவசிய பொருட் தேவையை பூர்த்தி செய்ய அன்புடன் வரவேற்கின்றோம்.

PHARMACY – TIP TOP HEALTH CARE
SUPER MARKET – FOURAMS CITY CENTRE
BUDGET SHOP – FOURAMS CASH & CARRY – Young Forever to wow you
CAFETERIA – FCC Cafe

உங்களின் வாழ்வை மேம்படுத்த நான்கு இறக்கைகள்...


## அனுதாபங்களும் பிரார்த்தனைகளும்!

மீண்டும் கண்கள் காணக்கூடாத, மீண்டும் காதுகள் கேட்கக்கூடாத துயரச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து ஓரிறைப் படைப்புகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

இறைவா!
துஷ்டர்களினதும் சாத்தான்களினதும் தீங்குகளை விட்டும் எம்மைக் காத்தருள்வாயாக!
எங்களின் உள்ளங்களைப் பிரித்துவிடாதே!
மட்டக்களப்பிலும் இலங்கைத் திருநாட்டிலும் முழு உலகிலும் சமாதான ஒளியைப் பரப்புவாயாக.

-- நிர்வாகம் மற்றும் ஊழியர்கள்--
FOURAMS GROUP மட்டக்களப்பு

*"ஒருவர் மற்றொருவரைக் கொலை செய்தால், அவர் எல்லா மனிதர்களையும் கொலை செய்தவர் போலாவார்"*
*"ஒரு மனிதனை வாழவைத்தவர் எல்லா மனிதர்களையும் வாழவைத்தவர் போலாவார்"*
--- அல்குர்ஆன்



FOR FREE DELIVERY SERVICE
இலவச விநியோக சேவைக்கு
CALL / SMS / WHATSAPP YOUR REQUEST TO US
Mob: 077 207 272 2 TP: 065 222 222 1
** நிபந்தனைக்குட்பட்டது ** Condition applies

Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa and Printed at Express News Papers (Cey) Ltd